வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 30.03.2024 சனிக்கிழமை இதழ் : 90 பக்கங்கள் : 12

# சஜித் தலைமையிலான கூட்டணி ஏப்ரல் 05இல் அங்குரார்ப்பணம்!

கொழும்பு, மார்ச் 30

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான அரசியல் கூட்டணி எதிர்வரும் ஏப்ரல் 5ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.**

ஏற்கனவே, ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளிக் கட்சியாக உள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியுடன் சஜித் பிரேமதாஸ புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தார்.

இதேபோன்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உட்பட மேலும் சில கட்சிகளுடனும் விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கைச்சாத்திட சஜித் பிரேமதாஸ ஆலோசனைகளை நடத்தி வருகிறார்.

ஐக்கிய மக்கள் கூட்டணி என்ற பெயரில் இந்தக் கூட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் தலைவர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் பதவி வகிக்கும் அமைச்சர்கள் குழு ஒன்றும் இந்தப் புதிய கூட்டணியில் இணைய விருப்பம் வெளியிட்டுள்ளது என்றும் அவர்கள் உட்பட மேலும் பலர் தமது கட்சியில் இணையவுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அரசியல் இலாபங்களுக்காக செயல்படுபவர்களை

11

எய்ட்ஸ் தொற்று பரவல்:

# மசாஜ் நிலையங்கள் விரைவில் மூடப்படும்

கொழும்பு, மார்ச் 30

நீர்கொழும்பில் மசாஜ் நிலையங்களில் நடத்தப்பட்ட சோதனையில் இரு பெண்களுக்கு எய்ட்ஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது. இதைத் தொடர்ந்து, ஆயுள்வேத மசாஜ் என்ற போர்வையில் இரகசியமாக விபசார சேவைகளை வழங்கும் மசாஜ் நிலையங்களை மூடுவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, நாட்டில் கடந்த வருடத்தையும் விட எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று மருத்துவர் ஜானகி விதானபத்திரண தெரிவித்துள்ளார். கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பி லேயே இதனைத் தெரிவித்தார்.

20 முதல் 30 வயதுக்குட்பட்டவர்களே எய்ட்ஸ் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

# அரிசி இறக்குமதியால் விவசாயிகளுக்கு பாதிப்பு

கிளிநொச்சி, மார்ச் 30

அரிசி இறக்குமதியால் சிறுபோக அறுவடையும் பாதிக்கப்படும் என்று பூநகரி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்வதற்கு மாறாக தற்போது அரிசி இறக்குமதி செய்வதற்கு எடுக்கின்ற முயற்சி விவசாயிகளை மேலும் பாதிப்புக்கு உள்ளாக்கும் - என்று நேற்று பூநகரி சின்ன பல்லவராயன்கட்டு விவசாயிகள் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தனர்.

நாட்டில் சம்பா வகை அரிசிக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. எனவே, அதற்கு இணையான அரிசி வகைகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் முயற்சிகளை எடுத்துள்ளது. அத்துடன், இறக்குமதியாகும் அரிசிக்கு வரிச்சலுகை அளிக்கவும் தயாராகி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் தேவாலயங்களில் புனிதவெள்ளி

கொழும்பு, மார்ச் 30

கத்தோலிக்கர்கள் புனித வெள்ளி தினத்தை நாடு முழுவதும் உள்ள தேவாலயங்களில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கடைப்பிடித்தனர்.

இதேநேரம், உயிர்த்த ஞாயிறு தினமான நாளையும் நாட்டின் அனைத்துத் தேவாலயங்களிலும் பாதுகாப்பு தொடர்ச்சியாக பலப்படுத்தப்பட்டிருக்கும் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றைய தினம் 6 ஆயிரத்து 837 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

கடந்த 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு

11

# 13ஐ உரிய முறையில் அமுலாக்க வேண்டும்!

மார்ச் 12 இயக்கத்தின் கூட்டத்தில் பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம



கொழும்பு, மார்ச் 30

இலங்கை எதிர்கொள்ளவுள்ள தேர்தல்களில் போட்டியிடவுள்ள அரசியல்வாதிகள் இனப் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வை காண வேண்டும். குறிப்பாக 13ஆவது திருத்தத்தையாவது உரிய முறையில் அமுல்படுத்த வேண்டும் - இவ்வாறு மார்ச் 12 இயக்கத்தின் மாநாட்டில் பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடக்கு - கிழக்கில் படையினர் ஆக்கிரமித்த பொதுமக்களின் காணிகளை மீளவும் அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின்

11

# அதிக மதுபாவனையால் குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 30

அதிக மதுபாவனையால் இளவாலையை சேர்ந்த நபர் ஒருவர் உயிரிழந்தார்.

கீரிமலை - கொலனியை சேர்ந்த 47 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார். குடும்பப் பிரச்னையால் இளவாலை - வசந்தபுரத்தில் தனியாக வசித்து வந்த உயிரிழந்த நபர், நேற்று வெள்ளிக்கிழமை அவர் வசித்து வந்த காணியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

பிரேத பரிசோதனையில் அதிக மதுபாவனையால் நுரையீரல் பாதிக்கப்பட்டே அவர் உயிரிழந்தார் என்று தெரிய வந்தது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ஐ)



# பூமியின் நேரம் குறைந்தது!

நியூயோர்க், மார்ச் 30

பூமியின் நேரம் ஒரு நாளைக்கு ஒரு விநாடி வீதம் குறைந்ததாக விஞ்ஞானிகள் கணித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

புவி வெப்பமயமாதலால், துருவப் பனிக்கட்டிகள் வேகமாக உருகி வருகின்றன. திடமான

11

# உலகின் தலைசிறந்ததாக மீண்டும் இலங்கை கிரிக்கெட் மாற்றப்படும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, மார்ச் 30

இலங்கை கிரிக்கெட்டை உலகில் தலைசிறந்தாக மீண்டும் காண்பதே எதிர்பார்ப்பு. இதற்கு அவசியமாக அனைத்து ஒத்துழைப்புகளையும் அரசாங்கம் பெற்றுக்கொடுக்கும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

அத்துடன், அரசியலையும் விளையாட்டையும் தனித்தனியாக பேண வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அரசியல்வாதிகள் விளையாட்டுக் கழகங்களில் உயர் பதவிகளை வகிப்பதை தடுக்க முடியுமானால் சிறந்தது என்றும் கூறினார்.

எஸ். எஸ். சி. என்று அழைக்கப்படும் சிங்கள விளையாட்டு கழகத்தின் 125ஆவது ஆண்டு விழாவில் நேற்று முன்தினம் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“றோயல், சென். தோமஸ், வெஸ்லி உள்ளிட்ட பாடசாலைகளில் இருந்து கிரிக்கெட்டில் இணைந்தவர்கள் அனைவரும் இங்கு வந்து சிங்கள விளையாட்டுக் கழகத்துடன் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதேபோன்று எனது பாட்டனார் மீதெனிய

11

# நீதி அமைச்சர் விஜயதாஸவுக்கு மனித உரிமைகள் குழு கடிதம்!

கொழும்பு, மார்ச் 30

அண்மையில் கடும் சர்ச்சைக்கு உள்ளான தண்டனைச் சட்டக்கோவையின் 363 மற்றும் 364 ஆம் பிரிவுகளைத் திருத்துவதற்கான சட்ட மசோதா தொடர்பில் தமது அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு கடிதம்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

திருகோணமலையில் அப்போது கன்னியா வெந்நீரூற்று இந்துக் கோவில் தொடர்பாக தமிழ் மக்கள் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஒரு சைவ ஆன்மீகத்தலைவர் பெரும்பான்மை பௌத்தர்களால் அவமானப்படுத்தப்பட்ட அளவுக்கு அங்கு நிலைமைகள் இருந்தன.

அப்போது திருகோணமலையின் மக்கள் பிரதிநிதியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் (அவரே அப்போது தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவராகவும் அறியப்பட்டிருந்தார்) எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் ஐயாவிடம் சென்ற ஊடகவியலாளர்கள் அந்தப் போராட்டம் குறித்து கருத்துக் கேட்டனர். அப்போது அவர் சொன்ன பதில் பலருக்கும் ஞாபகம் இருக்கலாம்.

“இது போன்ற பிரச்னைகளுக்கெல்லாம் நாங்கள் இப்போது முக்கியத்துவம் கொடுக்கவேண்டியதில்லை. எமது அரசியல் தீர்வு வந்த பின்னர், அதனையெல்லாம் மிகச் சுலபமாகத் தீர்த்துவிடலாம்” - இதுவே சம்பந்தன் ஐயாவின் பதில். ஆக, அவர் அப்போது நம்பிக்கொண்டிருந்த அரசியல் தீர்வு வந்தால் இதுபோன்ற பிரச்னைகளைத் தீர்த்துவிடலாம் என்பதுதான் அவரின் நம்பிக்கை.

இன்று, அவர் நம்பியது போல தீர்வும் வரவில்லை. கன்னியாவும் இன்று நம்மிடம் இல்லை. ஐயா நம்புகின்ற தீர்வு அல்ல, தனிநாடே வந்தாலும் இனி கன்னியா நமக்கானது அல்ல.

இந்த சம்பவத்தை இப்போது எதற்காக சொல்ல வேண்டிவந்தது என்பது உங்களுக்கு புரிந்திருக்கலாம்.

நேற்றைய ஈழநாடு தலைப்புச் செய்தி வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

“ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை இராணுவ சமூக சேவையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. அத்துடன், அந்தத் தொழிற்சாலையை புனரமைக்கும் பணிகளில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்”.

இதுவே அந்தச் செய்தி. இதனைப்படித்ததும், நீங்கள் ஒவ்வொருவரும் உணர்ச்சிவசப்படுவதில் தவறிருக்காதுதான். இந்தத் தொழிற்சாலையை சில புலம்பெயர் தமிழர்களையும் அழைத்துக்கொண்டு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அங்கு விஜயம் செய்திருந்தமை அப்போது அவரின் பத்திரிகையில் செய்தியாகவும் வெளிவந்திருந்தது.

அதுவல்ல, நாம் இங்கே சொல்ல வருவது:

சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் ஒரு தனியார் விடுதியில் நடைபெற்ற செயலமர்வு ஒன்றில் இளம் தொழில் முனைவோரும் மற்றும் முக்கிய வி. ஐ. பிகளும் கலந்துகொண்டிருந்தனர். அந்த செயலமர்வில் பேசிய முதலீட்டு சபையின் யாழ்ப்பாண பொறுப்பதிகாரி இந்த ஒட்டுசுட்டான் தொழிற்சாலை பற்றியும் பேசினார்.

“எல்லாமே தயாராக இருக்கின்றன. இருபது கோடி ரூபாயை முதலிட்டால் போதுமானது. அண்ணளவாக இரண்டாயிரம் பேருக்கு வேலை கொடுத்ததாகவும் இருக்கும், அந்தத் தொழிற்சாலை ஒரு காலத்தில் மிக இலாபகரமாக செயல்பட்ட ஒன்று என்பதால், அதனை பொறுப்பெடுத்து நிர்வகிக்க நமது தொழில் முனைவோர் அல்லது புலம்பெயர் மக்கள் முன்வரவேண்டும்” என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இதனைக் கேட்டுக்கொண்டிருந்த இந்த ஊர்க்குருவி அன்று இரவே, சில புலம்பெயர் நண்பர்களை வட்ஸ்அப் குறூப் அழைப்பில் அழைத்து, இருபது பேர் சேர்ந்தாவது, அதனை பொறுப்பெடுக்க முன்வாருங்கள்” என்று கோரிக்கை விடுத்தது அந்த நண்பர்களுக்கு நினைவிருக்கலாம்.

அந்த முதலீட்டுச் சபையின் அதிகாரி, இந்த விடயத்தை அந்த செயலமர்வில் மாத்திரம் சொல்லவில்லை. பல இடங்களில் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை மாத்திரமல்ல, இன்னும் பல விடயங்களையும் அவர் தொடர்ந்து வலியுறுத்தியே வந்தார்.

ஆனால், நம்மவர்கள் யாரும் முன்வராதபோது, இப்போது இராணுவம் அதனை பொறுப்பெடுத்திருக்கின்றது. இனி என்ன நமது முகநூல் போராளிகள் அதுகுறித்து பொங்கி எழப்போகின்றார்கள்.

சம்பந்தன் ஐயாவைப் போலவே, முதலில் நமது அரசியல் தீர்வு, அதன் பின்னரே அபிவிருத்தி என்று நாம் தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருந்தால், நமக்கென்று மிஞ்சப்போவது எதுவும் இல்லை.

அதிகம் ஏன், வடக்கில் மூன்று தீவுகளில் சூரியசக்தி, மற்றும் காற்றாலை மின் உற்பத்திக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது சீன நிறுவனம் அதனை செய்ய முன்வந்தபோதும் இப்படித்தான் நாம் எதிர்ப்பை வெளியிட்டோம். நமது எதிர்ப்பை பயன்படுத்தி இன்று இந்திய முதலீட்டாளர்கள் அதனை கைப்பற்றிவிட்டார்கள்.

வெறுமனே எதற்கு எடுத்தாலும் அதனை எதிர்ப்பது ஒன்றையே நமது இலட்சியமாகப் கொண்டோம் என்றால், கடைசியில் நமக்கென்று மிஞ்சப்போவது எதுவும் இல்லை.

**- ஊர்க்குருவி.**





# முல்லை உயர்தர மாணவர்கள் யாழ். இந்து கல்லூரிக்கு வருகை

யாழ்ப்பாணம், மார்ச் 30

முல்லைத்தீவின் 8 பாடசாலைகளின் விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும்முகமாக யாழ். இந்துக் கல்லூரியை பார்வையிட்டனர்.

இரசயானவியல், பௌதிகவியல் மற்றும் உயிரியல் பாடங்களுக்கான முதலாம் தவணை பரிசோதனைகள் இடம்பெற்றன. தொடர்ச்சியாக நிகழ்நிலையில் கற்பித்தலை யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர்கள் வழங்க ஏற்பாடு செய்துள்ளனர்.

அறிவியல் அமுது அறக் கட்டளையின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாணவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு வருகை தந்தனர். (ஐ)

# அதிகாரம் பகிரப்பட்டால் மட்டுமே பொருளாதார வளர்ச்சி சாத்தியம்!

## மார்ச் 12 இயக்க செயல்பாட்டாளர்

கொழும்பு, மார்ச் 30

அதிகாரபகிர்வு உரிய முறையில் சரியான விதத்தில் இடம்பெற்றால்தான் பொருளாதார வளர்ச்சி சாத்தியம் என்பதை சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என அரசியல் செயல்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் தூய்மையான அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்துவதற்காக மார்ச் 12 இயக்கம் ஏற்பாடு செய்திருந்த தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம் என்ற நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தூய்மையான ஒரு எதிர்காலத்தை தூய்மையான அரசியலுக்கான ஒரு தேவைப்பாட்டை அரசிடமிருந்து மக்கள் நீண்டகாலமாக எதிர்பார்க்கின்றனர்.

இலங்கை தொடர்ந்து பல வருடங்களாக பொருளாதார ரீதியில் பின்னடைவுகளை சந்தித்துவந்தாலும் 2022ஆம் ஆண்டு மிக மோசமான அடியை சந்தித்தது. 2022 பொருளாதார பிரச்னை என்பது வெறுமனே 2022ஆம் ஆண்டு வந்தது அல்ல இது மிகநீண்டகாலமாக தீர்க்க வேண்டிய பிரச்னைகளை தீர்க்காமல் அந்த பிரச்னைகளை மையமாக வைத்து அதன் ஊடாக அரசியல் இலாபம் தேடிக்கொண்டிருந்தவர்களால் எடுத்துக்கொண்டுவரப்பட்டு பின்னர் அது ஒரு பூகம்பமாக வெடித்தது.

அதுதான் நாங்கள் அனைவரும் எதிர்நோக்கிய மோசமான பொருளாதார நெருக்கடி. அதன் பிற்பாடு நாங்கள் மீட்சியை அடைந்துவிட்டோம் என சிலர் கூறினாலும் கூட நாங்கள் உண்மையான மீட்சியை அடையவில்லை. சிறந்த ஒரு பொறிமுறை ஊடாக நாங்கள் அடைய வேண்டிய இலக்குகள் இன்னமும் உள்ளன - என்றார். (ஐ)

# சிறை மருத்துவமனையில் ஞானசார தேரர் அனுமதி!

கொழும்பு, மார்ச் 30

4 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் திடீர் சுகவீனம் காரணமாக சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஞானசார தேரரை பார்வையிட சென்ற ராவணா பலய அமைப்பின் செயலாளர் நாயகம் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரர் இதற்கு முன்னரும் நோயால் பீடிக்கப்பட்டார் என்றும் அதற்கான சிகிச்சைக்காகவே சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் சத்தாதிஸ்ஸ தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தண்டனைக்கு எதிராக ஞானசார தேரர், மேன்முறையீடு செய்துள்ளதாகவும் சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார். (ஐ)

# மருத்துவ கழிவை எரிக்கும் எரியூட்டி திறந்து வைப்பு!



யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத் துவ கழிவுகளை எரியூட்டுவதற்காக கோம்பையன் மணல் இந்து மயானத்தில் உருவாக்கப்பட்ட எரி யூட்டி நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 4 கோடி ரூபாய் நிதி பங்களிப்பில் அமைக்கப்பட்ட குறித்த எரியூட்டி கடற் றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ கழிவுகளை எரியூட்டுவதில் கடந்த காலங்களில் பல் வேறு சர்ச்சைகள் எழுந்த நிலையில் எரியூட்டியை அமைப்பதற்கான இடத்தை தெரிவு செய்வதில் இழுபறி காணப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத்துக்கு அமைய யாழ். மாநகர சபை, கோம்பையன்மணல் இந்து மயான சபை என்பவற்றின் அனுமதியுடன் எரியூட்டி அமைக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
30.03.2024 சனிக்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சிவில் சமூகக் குழுக்கள் ஓரணிப்பட வேண்டும்

அரசியல் கட்சிகள் ஓரணியாக செயல்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் அதிகம் பேசியாகிவிட்டது. கடந்த பதினான்கு வருட காலமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எவையும் வெற்றிய ளிக்கவில்லை. ஆனால், இதிலுள்ள துரதிர்ஷ்டவசமான விடயம் என்னவென்றால் - அரசியல் கட்சிகளின் ஐக்கியம் தொடர்பில் பேசிய சிவில் சமூக் குழுக்கள் மத்தியிலும் ஒன்றுபட்டு செயல்படும் பண்பு இல்லாமல் இருப்பதுதான். அதற்கான முயற்சியை கடந்த காலத்தில் எந்தவொரு குழுவும் ஆக்கபூர்வமாக முன்னெடுக்கவும் இல்லை.

கடந்த பதினான்கு வருடங்களில் அரசியல் கட்சிகள் மட்டும் தோல்வி அடையவில்லை. மாறாக, சிவில் சமூக அமைப்புகளாகத் தங்களை அடையாளப்படுத்தியவர்களும்கூட அவர்களது நகர்வுகளில் ஆக்கபூர்வமான முன்னேற்றங்களை காண்பிக்க முடியவில்லை. சிவில் சமூகக் குழுக்களாகத் தங்களை அடையாளப் படுத்தியவர்கள் எவராலும் தாங்கள் முன்வைத்த விடயங்களில் முன்னோக்கிப் பயணிக்க முடியவில்லை. விடயங்களில் யதார்த்த பூர்வமான அணுகுமுறை இன்மையே இதற்கான காரணமாகும். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் "மக்கள் மனு" வடக்கு - கிழக்கு சிவில் சமூகக் குழு ஜனாதிபதி தேர்தலை கையாள்வது தொடர்பான உரையாடல்களை முன்னெடுத்துவருகின்றது.

அண்மைக்காலத்தில் ஒப்பீட்டடிப்படையில் முன்னேற்றகரமான ஒரு சிவில் சமூகக் குழுவாக மக்கள் மனு வடக்கு - கிழக்கு சிவில் சமூகக் குழு மட்டுமே வெளித்தெரிகின்றது. ஒரு குழுவில் உள்ள வர்களின் எண்ணிக்கைக்கு அப்பால் அவர்களிடமுள்ள யதார்த்த பூர்வமான அணுகுமுறையும் காலத்தை சரியாகப் புரிந்துகொள்ளும் திறனுமே ஒரு சிவில் சமூகக் குழுவின் தனித்துவத்தை தீர்மா னிக்கின்றது. அந்த வகையில் இதுவரையில் வடக்கு - கிழக்கு சூழலில் உருவாகிய சிவில் சமூகக் குழுக்கள் மத்தியில் தூரநோக்கும் அதேவேளை, விடயங்களை யதார்த்தபூர்வமாகக் கையாளும் திறனுமுள்ள ஒரு சிவில் சமூகக் குழுவாக "மக்கள் மனு" மட்டுமே வெளித்தெரிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலை கையாளும் விடயத்தில் அனைத்து சிவில் சமூகக் குழுக்களும் - அதேவேளை, தனிநபர்களும் மக்கள் மனு சிவில் சமூகக் குழுவின் முன்னெடுப்புடன் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

ஜனாதிபதித் தேர்தலை கையாளும் விடயத்தில் அனைத்து சிவில் சமூகக் குழுக்களும் கொள்கை நிலைப்பாடு ஒன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. அதாவது, ஒரு தமிழ் பொது வேட்பாளர் என்னும் விடயத்தில் ஒன்றுபட வேண்டியிருக்கின்றது. அதனை எவ்வாறு கையாள்வது என்று பின்னர் சிந்திக்கலாம் - முதலில், தமிழ் மக்கள் தீர்மானகரமான முடிவு ஒன்றை மேற்கொள்ளக்கூடிய வர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும்.

அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபடாவிட்டால் இந்த முயற்சி ஒருபோதும் வெற்றியளிக்காது. அரசியல் கட்சிகளை இந்த இலக்குக் காக இறங்கிவர வைப்பதில் சிவில் சமூகக் குழுக்களுக்கே பிரதான பங்கு உண்டு. வடக்கு - கிழக்கிலுள்ள சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் அரசியல் விடயங்களில் கரிசனையுடன் செயல்பட்டுவரும் தனிநபர்கள் ஆகியோர் அனைவரும் இந்த விடயத்தில் ஒன்றுபட வேண்டியிருகின்றது. பெரும்பாலான சிவில் சமூகக் குழுக்கள் ஓரணியாகினால், தமிழ் பொது வேட்பாளர் விடயம் அரைவாசி வெற்றியை எட்டிவிடும். அரசியல் கட்சிகளில் பெரும்பாலானவை பொது வேட்பாளர் எண்ணக்கருவை நோக்கி வர வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்.

# தரம் 6-11 மாணவர்களுக்கும் மதிய உணவை வழங்குங்கள்

## அரசிடம் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

*கொழும்பு, மார்ச் 30*

ஆரம்பப் பிரிவு மாண வர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவை தரம் 6 - 11 வரையான மாணவர்களுக் கும் வழங்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கேட்டுள் ளது.

அரசினால் தற்போது நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத் தின் மூலம் தரம் 1 தொடக் கம் 5 வரையான அனைத்து மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்படுகின்றது.

உடல், உள செயல்பாடு களில் முழுமையாக ஈடுபடு கின்ற வயதுடைய, பாடச்சுமையில்லாமல், மைதான மற்றும் களச் செயல்பாடுகளில் ஈடுபடு கின்ற நாட்டின் அதிஉச்ச மான போட்டிப் பரீட்சை யாகக் கருதப்படுகின்ற க.பொ.த. உயர்தர பரீட் சைக்கு முன்னோடியான வகுப்புக்களான தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை யான வகுப்புகளில் கற்கும் மாணவர்களில் பல்லாயிரக் கணக்கானோர் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட வர்கள்.

அவர்களிடத்தே பருவ மாற்றம் போன்ற உளவியல் சார்ந்த அம்சங்கள் ஆதிக்கம் செலுத்துவதால் அவர்க ளின் போசாக்கு என்பது மிகவும் அத்தியாவசியமா னது. ஆகவே தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை யான வகுப்பு மாணவர்க ளுக்கு இலவச உணவை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் வலியு றுத்தியுள்ளது.

இதேவேளை நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதா ரச் சுமை, சுயதொழிலின்மை, வருமானமின்மை போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு அத்தகைய சுமை கள் உள்ள மாணவர்களுக் காவது மதிய உணவு வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென கல்வி அமைச்சிடம் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள் ளது.

(ஐ)

# பொதுஜன பெரமுன கட்சியின் மகா சம்மேளன கூட்டம் இன்று

*கொழும்பு, மார்ச் 30*

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாந் தோட்டை மாவட்ட மகா சம்மேளனம் "போராட் டத்தை ஆரம்பிப்போம் - அம்பாந்தோட்டையில் மாபெரும் மக்கள் பேரணி" என்ற தொனிப்பொருளில் தங்காலை நகரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் நடத்துகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலை மையில் நடைபெறவுள்ள இந்த சம்மேளனத்தில் பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர் கள் உள்ளிட்டோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் கடந்த புதன்கிழமை நடை பெற்ற பொதுஜன பெரமுன வின் நிறைவேற்று சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட வுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலை மையில் இடம்பெற்ற நிறை வேற்று சபை கூட்டத்தில் கட்சியின் தேசிய அமைப் பாளராக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜ பக்ஷ ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன், நாடளாவிய ரீதியில் அரசியல் கூட்டங் களை நடத்தும் பொறுப்பு நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஐ)

# பதநீருக்கு கிராக்கி!

*யாழ்ப்பாணம், மார்ச் 30*

யாழ்ப்பாணம் முற்ற வெளியில் புதிதாகத் திறக் கப்பட்டுள்ள "தாலம்" பனம்பொருள் விற்பனை நிலையத்தில் அதிகளவா னோர் பதநீர் கொள்வன வில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத் திக் கூட்டுறவுச் சங்கங்க ளின் சமாசத்தால் இந்த விற்பனையகம் அண்மை யில் திறந்து வைக்கப்பட் டது.

தற்போதைய வறட்சி யான கால நிலையைய டுத்து பதநீர் நுகர்வு அங்கு உயர்ந்துள்ளது என்று தெரிய வருகின்றது. (ஐ)

# மரியன்னை பேராலயத்தில் பெரிய வெள்ளி திருப்பலி!

*கொழும்பு, மார்ச் 30*


வரலாற்று சிறப்புமிக்க யாழ்ப்பாணம் மரியன்னை பேராலாயத்தில் பெரிய வெள்ளி தினத்தை முன் னிட்டு சிறப்பு கூட்டுத் திருப்பலி நேற்று வெள்ளிக் கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

இந்தக் கூட்டுத்திருப் பலியை யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் பேணார்ட் ஜஸ்டின் ஞானப் பிரகாசம் ஆண்டகை ஒப்புக் கொடுத்தார்.

இதில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர் கள் வருகை தந்து கலந்து கொண்டனர்.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**மார்ச் - 30 சனிக்கிழமை**
**சோபகிருது வருடம் - பங்குனி 17**
**நல்ல நேரம் : 07.30 - 08.30**
**ராகு காலம் : 09.00 - 10.30**
**திதி : பஞ்சமி**




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு. திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**இடபம்**
கடினமான காரியம் ஒன்று எளிதாக முடியும். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். திடீர் பயணங்கள் இருக்கும். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். அதிகாரப் பதவி யில் இருப்பவர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். தலைமைக்கு நெருக்கமாவீர்கள். அமோகமான நாள்.

**கடகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். புது வேலை அமையும். கனவு நனவாகும்.

**சிம்மம்**
எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். கவலைகள் வந்து போகும். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**
இதுவரை இருந்த சோர்வு,களைப்பு யாவும் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். மறதியால் பிரச்னை வந்து நீங்கும். தானுண்டுதன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**தனுசு**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். சலவுகளை போராடி சமாளிப்பீர்கள். உறவினர்கள், சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**மகரம்**
எந்த பிரச்னையையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். சிறப்பான நாள்.

**கும்பம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். மதிப்புக்கூடும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

# இரட்டை இலை சின்னம் அ. தி. மு. க. கட்சிக்கே!

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு

சென்னை, மார்ச் 30

அ. தி. மு. கவுக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கீடு செய்து தேர்தல் ஆணையம் அறிவிக்கை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் இரட்டை இலை சின்னம் விவகாரம் முடிவுக்கு வந்துள்ளது.

“மக்களவைத் தேர்தலில் இரட்டை இலை சின்னத்தில் தான் போட்டி. சின்னத்தை பெறுவது எப்படி என்பது பரம இரகசியம்“ என்று முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்ததுடன், அப்படி இல்லையேல் அந்த சின்னத்தை முடக்க வேண்டும் என்று கூறி அது தொடர்பில் நடவடிக்கையும் எடுத்திருந்தார்.

இது அரசியல் மட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில், அ. தி. மு. க. கட்சியின் பழனிசாமி பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டமை அங்கீகரிக்கப்பட்டமையால் இரட்டை இலை சின்னம் அ. தி. மு. க. கட்சிக்கே உரியது என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. (ஐ)

# பா. ஜ. க. தவறு செய்தால் நாங்கள் தட்டிக்கேட்போம்

## எடப்பாடி பழனிசாமி

மதுரை, மார்ச் 30

“பா. ஜ. க. தவறு செய்தால் நாங்கள் தட்டிக்கேட்போம். தமிழ்நாட்டு மக்களுக்கு பாதிப்பு வருகின்ற திட்டங்களைக் கடுமையாக எதிர்ப்போம்” என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“மக்களவைத் தேர்தலில் அ. தி. மு. க. - தே. மு. தி. க. கூட்டணி ஏற்பட்டதை அடுத்து நிர்வாகிகள் தொண்டர்கள் எழுச்சியோடு செயல்பட்டு வருகிறார்கள். அ. தி. மு. க. கூட்டணிக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. பாராளுமன்றத் தேர்தலில் அ. தி. மு. க. கூட்டணி 40 இடங்களிலும் வெற்றி பெறும். தமிழகத்தில் ஒரே அலைதான் வீசுகிறது. அது அ. தி. மு. க. அலையாக வீசுகிறது.

அ. தி. மு. க. கள்ளக்கூட்டணி வைத்துள்ளது என முதல்வர் விமர்சனம் செய்வதற்கு அவரே விளக்கம் அளிக்க வேண்டும். இப்படி எல்லாம் யாரும் விமர்சனம் செய்ததே இல்லை. ஒவ்வொரு தேர்தல் சூழ்நிலைக்கு ஏற்ப கூட்டணி அமைக்கப்படுகிறது. பா. ஜ. க. கூட்டணியில் இருந்து வெளியேறிய பின்பும் முதல்வர் மு. க. ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுமென்றே திட்டமிட்டு அ. தி. மு. க. மீது அவதூறு பரப்பி வருகின்றனர். தோல்வி பயத்தின் காரணமாக முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் அ. தி. மு. கவை அவதூறாகப் பேசி வருகிறார்கள் - என்றார். (ஐ)

# தமிழ்நாட்டின் பிரதான கட்சியாக பா. ஜ. வளர்ச்சி!

## மத்திய இணை அமைச்சர் முருகன்

சென்னை, மார்ச் 30

தமிழகத்தில் பிரதான கட்சியாக பா. ஜ. க. வளர்ந்து வருகிறது என்று மத்திய இணை அமைச்சரும், நீலகிரி மக்களவைத் தொகுதி பா. ஜ. க. வேட்பாளருமான எல். முருகன் தெரிவித்தார்.

பா. ஜ. க. இன்றைக்கு தமிழகத்தில் அசுர வளர்ச்சியோடு பிரதான கட்சியாக வளர்ந்து வருகிறது. பிரதமர் மோடி தமிழ்நாட்டு மக்கள்மேல் அளவுகடந்த பாசத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். சமூக நீதி, திராவிட மொடல் என்று போலியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசிக் கொண்டிருக்கிறார். தி. மு. கவில் பட்டியலின மக்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆனால், பா. ஜ. கவில் முதல்வராகவும், துணை முதல்வராகவும் உள்ளனர். சட்டப்பேரவை தேர்தலின்போது அளித்த எந்த வாக்குறுதிகளையும் தி. மு. க. நிறைவேற்றவில்லை. நீலகிரியில் இந்தத் தேர்தல் 2ஜியா, மோடிஜியா என்ற கேள்வியுடன் எதிர்கொள்ள வேண்டியுள்ளது - என்றார். (ஐ)



# தமிழகம் வருகிறார் அமித் ஷா

சென்னை, மார்ச் 30

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தமிழகத்தில் எதிர்வரும் ஏப்ரல் 4, 5ஆம் திகதிகளில் பிரசாரம் செய்யவுள்ளார்.

தமிழகத்தில் மக்களவை தேர்தல் ஏப்.19ஆம் தேதி நடக்கிறது. தமிழக தலைவர்களின் பிரசாரத்துக்கு மத்தியில் தேசிய தலைவர்களும் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளனர். பிரதமர் மோடி இந்த மாத தொடக்கத்தில் திருப்பூர், சேலம், கோவை, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் பிரசாரம் மேற்கொண்டார். அவரைத் தொடர்ந்து, ஏப். 4, 5 ஆகிய தேதிகளில் மத்திய அமைச்சர் அமித் ஷா தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்யவுள்ளார். (ஐ)

# மக்களை நம்பித்தான் தேர்தலில் நிற்கிறோம்

## நாம் தமிழர் சீமான்

சென்னை, மார்ச் 30

மக்களை நம்பித்தான் தேர்தலில் நிற்கிறோம் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கன்னியாகுமரியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மேலும், 40 தொகுதிகளிலும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியையும், நம்பிக்கையும் தருகிறது. நாங்கள் வளர்வது பா. ஜ. கவினருக்கு இடையூறாகவும், அவர்களை வளர விடாமல் நான் தடையாக இருப்பதாகவும் நினைக்கிறார்கள். அதனால், சின்னம் உள்ளிட்ட விசயங்களில் பிரச்னை கொடுக்கிறார்கள்.

தேர்தல் ஆணையம் பாரதிய ஜனதா கட்சியின் பணிமனை போல் செயல்படுகிறது - என்றார். (ஐ)

# பயங்கரவாத சட்டத்தில் கைதான வவுனியா இளைஞருக்கு மறியல்

கொழும்பு, மார்ச் 30

**விடுதலைப் புலிகளின் படங்கள், சின்னங்களை பேஸ்புக்கில் பதிவிட்டதன் மூலம் பயங்கரவாதத்தை மறுசீரமைக்க முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைதான இளைஞரை மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தவிட்டுள்ளது.**

முன்னாள் போராளியான செ. ஆனந்தவர்ணன் என்ற வவுனியாவை சேர்ந்த இளைஞரே எதிர்வரும் 11ஆம் திகதி வரை கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றால்மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர், இராணுவவத்தினரை ஏற்றிச் சென்ற பேருந்துகளில் வெடிகுண்டு வைப்பதற்காக விடுதலைப் புலிகளுக்கு புலனாய்வு தகவல் வழங்கிய குற்றச்சாட்டில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்ட சிறைத்தண்டனை பெற்றவர் என பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் விடுதலைப் புலிகளின் முன்னாள் தலைவர்களின் படங்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் சின்னங்களுடன் பேஸ்புக் கணக்கை நடத்தி, பல்வேறு அறிக்கைகளை வெளியிட்டு, அமைப்பை மறுசீரமைக்கும் நோக்கில் பிரசாரம் செய்து வருவதாக செய்த முறைப்பாடு தொடர்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளை கருத்திற்கொண்ட நீதிவான், சம்பவம் தொடர்பான விசாரணைகளை முடித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவித்ததுடன், சந்தேக நபரை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ)

# இந்திய துணைத் தூதுவர் யாழ். தளபதியுடன் சந்திப்பு




யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவர் எஸ். சாய் முரளி யாழ். யாழ். மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் எம். சி. பி. விக்ரமசிங்கவை சந்தித்தார்.

நேற்று முன்தினம் நடந்த யாழ். படை தலைமையகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது இந்திய துணைத் தூதுவருக்கு யாழ். படைகளின் தளபதி சிறப்பு நினைவுச் சின்னத்தை வழங்கியதுடன், யாழ்ப்பாண இந்திய துணைத் தூதுவர் தனது பயணத்தின் அடையாளமாக விருந்தினர் பதிவேட்டு புத்தகத்தில் பாராட்டு குறிப்புக்களை எழுதினார். (ஐ)

# அமைச்சர் சந்திகாந்தன் கிளிநொச்சிக்கு வருகை!



கிளிநொச்சி, மார்ச் 30

கிளிநொச்சி பாரதிபுர செபஸ்ரியார் வீதியின் பாலம் புனரமைத்தலுக்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தப் பாலம் புனரமைப்புக்கு கிராமிய வீதிகள் அபிவிருத்தி அமைச்சின் ஒரு கோடியே 53 இலட்சத்து 29 ஆயிரத்து 888 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

# ‘யாழ். ஆரோக்கிய பவனி’ துய்மையாக்கல் பணி இன்று!

யாழ்ப்பாணம், மார்ச் 30

அனைத்துலக சுழியக் கழிவு தினமான இன்றைய தினம் சிகரம் நிறுவனத்தின் படலை வட மாகாண சுற்றுலா சேவைப் பிரிவினரின் ஒழுங்குபடுத்தலில், யாழ் மாநகர பகுதியில் தூய நகரை உருவாக்குவதை இலக்காகக் கொண்ட ‘யாழ். ஆரோக்கிய பவனி’ தூய்மையாக்கல் பணியும் - விழிப்புணர்வு செயல்பாடும் நடைபெறவுள்ளது.

இந்தியத் துணைத் தூதரகம், யாழ். மாநகர சபை, யாழ் பிரதேச செயலகம், தொல்லியல் திணைக்களம், யாழ்ப்பாண பொலிஸாரின் நேரடிப் பங்களிப்பு மற்றும் ஆதரவுடன் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்தத் திட்டத்தின்கீழ், யாழ் நகரின் பிரதான வீதிகள் ஊடகாவும் யாழ்ப்பாணத்தின் சுற்றுலா ஈர்ப்பு வலயமாக காணப்படும் மணிக்கூட்டுக் கோபுரம் முதல் பண்ணை சுற்றுவட்டம் வரையிலான பகுதியிலும் தூய்மை பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ். ஆரியகுளம் சந்தியில் காலை 7 மணியளவில் ஆரம்பிக்கும் இந்தப் பணி, 3 வீதிகளூடாக பண்ணைப் வரையில் நடைபெறும்.

ஓர் அணி ஆரியகுளம் சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியூடாக மருத்துவமனை வீதியை அடைந்து, அங்கிருந்து மகாத்மா காந்தி வீதியூடாக, மணிக்கூட்டுக் கோபுரம், பொது நூலகம், துரையப்பா விளையாட்டரங்கு, யாழ் கோட்டை, பண்ணை நடைபாதை ஊடாக பண்ணை சுற்றுவட்டத்தை அடைவர்.

இரண்டாவது அணி, ஆரியகுளம் சந்தியிலிருந்து ஸ்ரான்லி வீதியூடாக முட்டாஸ் கடைச் சந்தியை அடைந்து, கே.கே.எஸ். வீதியூடாக, தபால் கந்தோர் சந்தியைக் கடந்து சுற்றுவட்ட வீதியூடாக பண்ணைச் சுற்றுவட்டத்தை அடையும்.

மூன்றாவது அணி, யாழ் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதான வீதி தண்ணீர் தாங்கி பகுதியிலிருந்து ஆரம்பித்து கடற்கரை வீதியூடாக பண்ணை சுற்றுவட்டத்தை வந்தடையும்.

பண்ணை சுற்றுவட்டப் பாதையை அனைத்து அணிகளும் வந்தடைந்ததும், காலை 9.30 மணியளவில ரில்கோ உல்லாச விடுதியின் ஏற்பாட்டில் தாகசாந்தி வழங்கப்படுவதுடன், பண்ணை நடைபாதை, யாழ் கோட்டை உள்ளிட்ட சுற்றுலா பயணிகளை அதிகம் கவரும் பகுதிகளை நிரந்தரமாக தூய்மையாகப் பேணும் வழிவகைகள் குறித்த கலந்துரையாடலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த நிகழ்வில், இந்திய துணைத் தூதுவர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ் மாநகர ஆணையாளர், மாநகரசபையின் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் யாழ் வணிகர் கழக பிரதிநிதிகள், உல்லாச விடுதிகளின் உரிமையாளர்கள் மற்றும் பிரதிநிதிகளும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஏற்றுமதி மூலமாக ரூ. 98 கோடி இரு மாதங்களில் வருமானம்!

## இராஜாங்க அமைச்சர் ரணவீர

கொழும்பு, மார்ச் 30

கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் இலங்கை 98. 37 கோடி ரூபாய் ஏற்றுமதி வருமானத்தை பெற்றுள்ளது. அத்துடன், நாடு தற்போது சரியான பொருளாதார பாதையில் செல்வதை அது உறுதிப்படுத்துவதாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்தார்.

பாடசாலை காலத்திலேயே தொழில்முயற்சி சூழலுக்குள் ஈர்த்தெடுப்பது அவர்களை எதிர்காலத்தில் தொழில்முனைவோராக உருவாக்க வழிவகுக்கும் என்று ஜனாதிபதி ஊடக மையத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

மேலும், கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து ஒரு நாடாக குறிப்பிடத்தக்களவு சாதனைகளை நாம் அடைந்துள்ளோம். கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் 98. 37 கோடி ரூபாய் ஏற்றுமதி வருமானம் கிடைத்துள்ளது.

ஜனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களில் சுமார் 5 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை




தந்துள்ளனர். மேலும், நம் நாட்டில் 2.5 வீதமாக இருந்த தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கையை 3 வீதமாக அதிகரிக்க முடிந்துள்ளது. நாடு தற்போது சரியான பொருளாதார பாதையில் செல்வதை இந்தத் தரவுகள் உறுதிப்படுத்துகிறது - என்றார். (ஐ)

# கசிப்பு காய்ச்சிய இளைஞர் புதுக்குடியிருப்பில் கைது!



முல்லைத்தீவு, மார்ச் 30

புதுக்குடியிருப்பு - உடையார்கட்டு குளப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த இளைஞரை பொலிஸார் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இந்தக் கைது இடம்பெற்றுது. இதன்போது, கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

உடையார்கட்டு குளத்தின் அருகிலுள்ள காட்டு பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி இடம்பெற்று கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அந்தப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது 5.6 லீற்றர் கசிப்பு, 75 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களுட மூங்கிலாறை சேர்ந்த 23 வயது இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். (ஐ)

# பொருட்களுக்கான விசேட வரி ஜனவரி முதல் நீக்கப்படும்!

## நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, மார்ச் 30

**பொருட்களுக்கான விசேட பண்ட வரி எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நீக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.**

உள்நாட்டு விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களின் நலன் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதேநேரம், உள்நாட்டு விவசாயிகளை பாதுகாக்கும் நோக்கில் புதிய வரி ஒன்றும் அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# அரச ஆட்சேர்ப்பு வயதை அதிகரிக்க ஆலோசனை

## இராஜாங்க அமைச்சர் முன்வைத்தார்

கொழும்பு, மார்ச் 30

அரச வேலைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் பட்டதாரிகளின் வயது வரம்பை 38 ஆக அதிகரிக்க வேண்டுமென விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது ஆட்சேர்ப்புக்கான வயது வரம்பு 35 ஆக உள்ளது என்றும் தெரிவித்திருந்தார்.



தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக வயது வரம்பை திருத்தியமைக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# நீதிவான் திலின கமகேவிடம் சி. ஐ. டியினர் வாக்குமூலம் பதிவு

கொழும்பு, மார்ச் 30

இனந்தெரியாத துப்பாக்கிதாரி ஒருவரால் நீதிவானைக் கொலை செய்ய முயற்சித்தமை தொடர்பான விசாரணைகள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் நேற்றுமுன்தினம் கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகேவிடம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

குறித்த தகவல் அடங்கிய கடிதத்தை அனுப்பிய தகவலறிந்த நபரிடம் துப்பாக்கி கோரிய நபர் செய்த அழைப்புகள் தொடர்பிலான விசாரணைகளை குற்றப் புலனாய்வு திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு செய்திகளை அனுப்புவதற்கு நீதிவானின் மின்னஞ்சல் போன்று போலி மின்னஞ்சல் முகவரி பயன்படுத்தப்பட்டமை குறித்தும் விசாரணை நடக்கிறது.

நீதிவான் திலின கமகேவை கொல்லும் முயற்சியில் இனந்தெரியாத துப்பாக்கிதாரி ஒருவர் துப்பாக்கியை பெற முயன்றமை தொடர்பில் புலனாய்வு பிரிவை சேர்ந்த ஒருவர் வெளிக்கொணர்ந்தார். இதையடுத்து, நீதிவான் திலின கமகேவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

### தரமற்ற இந்திய மருந்துகள்:

# பாதிக்கப்பட்டவர்கள் குறித்த அறிக்கையை வழங்க உத்தரவு

கொழும்பு, மார்ச் 30

இந்திய கடன் திட்டத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இம்யூனோகுளோபுலின் மற்றும் புற்றுநோய் எதிர்ப்பு மருந்தான "ரிரொக்ஸிமப்" ஆகியவற்றை அரச மருத்துவமனைகளில் பெற்று மரணமானோர், நோயாளிகளானோர் தொடர்பான அறிக்கையை எதிர்வரும் மே 30ஆம் திகதிக்கு முன்னர் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் சமர்ப்பிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு மாளிகாகந்தை நீதிவான் திருமதி லோச்சனி அபேவிக்ரம வீரசிங்க உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகத்திற்குரிய இந்த இரண்டு மருந்துகளும் மருத்துவ விநியோகப் பிரிவுக்கு வழங்கப்பட்டமை தொடர்பில் திணைக்களத்திற்குள் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மற்றோர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இம்யூனோகுளோபுலின் ஊசியின் தரமற்ற மருந்துகளை கொள்வனவு செய்தமை தொடர்பான விசாரணை நடந்தபோதே இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. (ஐ)

# ஒத்திவைத்த தண்டனையுடன் 7 இந்திய மீனவர்கள் விடுவிப்பு

மன்னார், மார்ச் 30

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த மேலும் 7 இந்திய மீனவர்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் கடற்பரப்பில் கடந்த 20 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இந்த 7 மீனவர்களும் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது, குறித்த 7 மீனவர்களுக்கும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்து மேலதிக நீதவான் லதீப் ரதீப் விடுவித்தார்.

முதலாவது படகில் கைது செய்யப்பட்ட மூவருக்கும் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டின் கீழ் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது படகில் கைது செய்யப்பட்ட 4 மீனவர்களுக்கும் மூன்று குற்றச்சாட்டுகளின் கீழ், முதலாவது குற்றச்சாட்டிற்கு ஒரு வருடமும், இரண்டாவது குற்றச்சாட்டிற்கு 6 மாதங்களும், மூன்றாவது குற்றச்சாட்டிற்கு 5 மாதங்களும் என 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 23 மாத சிறைத்தண்டனை விதித்து மேலதிக நீதவான் உத்தரவிட்டார்.

இரண்டு படகுகளின் உரிமையாளர்களை முதலாவது குற்றவாளியாக குற்றஞ்சுமத்தி, கடற்றொழில் திணைக்களத்தால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், படகு உரிமையாளர்களை எதிர்வரும் ஜூலை 11 ஆம் திகதி மன்றில் முற்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட மீனவர்களை மிரிஹானை இடைத்தங்கல் முகாமுக்கு அனுப்பி அங்கிருந்து இந்தியாவிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தூதரகத்துக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஆயுள்வேத வைத்தியசாலையில் மருந்துகளுக்கு பெருந்தட்டுப்பாடு!

கிளிநொச்சி, மார்ச் 30

கிளிநொச்சியில் ஆயுள்வேத வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது என பொது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆயுள்வேத சிகிச்சைகளுக்கு செல்லும் நோயாளிகளுக்கு மருந்துகளை வெளியில் பெற்றுக்கொள்ளுமாறு மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர். பொருளாதார நெருக்கடி காரணமாக பெரும்பாலான பொது மக்கள் மருந்துகளை கொள்வனவு செய்ய முடியாத நிலையில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சம்மந்தப்பட்ட வைத்தியர்களை தொடர்புகொண்டு வினவிய போது,



கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக 50 வீத மான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது எனவும் கொழும்பிலிருந்து தங்களுக்கு உரிய மருந்து கிடைக்கப்பெறவில்லை என்றும் தெரிவித்த அவர்கள், இதன் காரணமாக மாதாந்தம் தங்களிடம் சிகிச்சைக்காக வருகின்ற பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

# முன்னறிவிப்பு எதுவுமின்றி மின்சார இணைப்பு துண்டிப்பு

## வவுனியா மக்கள் விசனம்

வவுனியா, மார்ச் 30

வவுனியா மாவட்டத்தில் முன்னறிவித்தல் இன்றி மின் இணைப்பு துண்டிக்கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மின்சார சபையினரின் குறித்த நடவடிக்கையானது பொது மக்கள் மத்தியில் கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது, மின் பட்டியல்கள் வழங்கப்படுவதில்லை. கைபேசிகளுக்கே குறுந்தகவலாக அனுப்பப்படுகின்றது. இந்நிலையில், மின் கட்டணம் செலுத்தாதவர்களின் மின் இணைப்பு எந்த முன்னறிவிப்பும் இன்றி துண்டிக்கப்படுகிறது என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பில் மின்சார சபை பணிமனையிலும் சிலர் முரண்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# பாதாள உலகக் குழுவின் 186 உறுப்பினர்கள் கைது!

கொழும்பு, மார்ச் 30

நாடளாவிய ரீதியில் போதைப் பொருள் வர்த்தகர்கள் மற்றும் விநியோகிக்கும் வலையமைப்பை கட்டுப்படுத்தும் நோக்கில், முன்னெடுக்கப்படும் 'யுக்திய' விசேட சோதனை சுற்றிவளைப்புகளில் பாதாள உலகக் கும்பலுடன் தொடர்புடைய 186 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மார்ச் 19 ஆம் திகதி முதல் நேற்று முன்னதினம் வரையான மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதேநேரம், நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது பாதாள உலக குழுக்களுடன் தொடர்புடைய 10 சந்தேக நபர்களும், அவர்களுக்கு உதவினர் என்று சந்தேகிக்கப்படும் 5 நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பாதாள உலக குழுவைச் சேர்ந்தவர்களின் 10 கோடி ரூபாய்க்கும் அதிகமான சொத்துகள் பொலிஸ் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோதமான சொத்துக்களில் 2 இழுவை படகுகள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் காணிகள் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலி, அம்பலாங்கொடை மற்றும் அஹூங்கல்ல ஆகிய இடங்களில் உள்ள பொலிஸ் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவின் அதிகாரிகளினால் இவை கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் பின்னணியை கண்டறிய கோட்டாபயவே தடை!

## கத்தோலிக்க திருச்சபை தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 30

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ள விடயங்களை கண்டுபிடிப்பதற்கு முக்கிய தடையாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே காணப்படுகின்றார் என்று கத்தோலிக்க திருச்சபையின் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.**



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று பல மாதங்களின் பின்னர் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ செய்த எடுத்த முதல் நடவடிக்கை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை செயலிழக்கச் செய்ததே.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள் யார் என்று தனக்கு தெரியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தமை குறித்து கருத்து தெரிவித்துள்ள அருட்தந்தை சுயாதீன ஆணைக்குழுவை நியமித்தால் மாத்திரமே உண்மை வெளிவரும் - என்றார்.

ஷானி அபயசேகர தலைமையிலான ஆணைக்குழுவை மீண்டும் நியமிக்கவேண்டும் சர்வதேச அளவில் விசாரணை நடைபெறவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனை செய்தால் மைத்திரிபால சிறிசேன அதன் முன்னிலையில் தோன்றி சூத்திரதாரி யார் என்ற உண்மையை தெரிவிக்க முடியும் எனவும் அருட்தந்தை தெரிவித்துள்ளார்.

நீங்கள் கோட்டாபய ராஜபக்ஷவை சூத்திரதாரி என தெரிவிக்கின்றீர்களா என எழுப்பிய கேள்விக்கு அருட்தந்தை சிறில், "ஆம் அது தெளிவான விடயம்", - என்றார்.

ஆட்சி மாற்றத்தின்போது அரசியல் வஞ்சகர்கள் மீண்டும் தெரிவு செய்யப்பட்டால் அது ஏற்கனவே, பொருளாதார நெருக்கடி சட்டம் ஒழுங்கின் மையினால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நாட்டுக்கு மேலும் பேரழிவாக அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அமைப்பு முறையில் பெரும் மாற்றம் ஏற்பட்டால் மாத்திரமே உண்மை வெளிவரும். அமைப்பு முறை மாற்றம் ஏற்படுவதற்கு அரசியல் நிர்வாகம் முற்றாக மறுசீரமைக்கப்படுவது அவசியம் - என்றும் அவர் தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்தார். (ஐ)

# பரிசு அறிவிப்புடன் வருகின்ற இணைப்புகளை அழுத்தாதீர்!

## கணினி அவசரநிலை தயார் நிலை குழு

கொழும்பு, மார்ச் 30

பிரபல வர்த்தக நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் இலச்சினைகளுடன் பரிசுகள் வழங்கப்படும் எனக் கூறி சமூக ஊடகங்களில் பகிரப்படும் இணைப்புகளை அழுத்த (க்ளிக்) வேண்டாம் என இலங்கை கணினி அவசரநிலை தயார்நிலைக் குழு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இது குறித்து இலங்கை கணினி அவசர நடவடிக்கை பிரிவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக தமுனுபொல தெரிவித்தவை வருமாறு,

குறித்த இணைப்புகள் குறுஞ்செய்தி, வட்ஸ்அப், எக்ஸ் (ருவிற்றர்) மற்றும் பேஸ்புக் மற்றும் கைபேசி அழைப்பு ஆகியவற்றினூடாக பகிரப்படுகின்றன. இவ்வாறான இணைப்புகள் வந்தால் அவற்றை அழுத்துவதற்கு முன்பு அவற்றின் நம்பகத்தன்மையை முதலில் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இது போன்ற இணைப்புகள் உங்கள் நண்பர்கள் வட்டாரத்தில் இருந்து உங்களுக்கு வரலாம்.

சில சமூக ஊடகங்களில் பகிரப்படும் இவ்வாறான இணைப்புகளை அழுத்துவதன் மூலம் உங்களின் தனிப்பட்ட தரவுகள் திருடப்படலாம்.

மேலும், உங்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம், சாரதி அனுமதி பத்திரம், வங்கிக் கணக்கு விவரங்கள், ஒரு முறை பயன்படுத்தப்படும் கடவுச்சொல், வேலை செய்யும் விவரங்கள் போன்ற தனிபட்ட விவரங்களை பெற்றுக் கொள்வார்கள்.

சில நேரங்களில் மூன்றாம் தரப்பு கைபேசியில் இணைப்புகள் பதிவிறக்கம் செய்யப்பட்டு, குறித்த கைபேசியில் சேமித்து வைக்கப்பட்டுள்ள தனிபட்ட விவரங்களை திருடலாம். எனவே அவர்களும் பாதிக்கப்படலாம் என்பதால், அந்த இணைப்புகளை மற்றவர்களுடன் பகிர வேண்டாம் - என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

# கரையோர ரயில் சேவைகள் இன்றும் நாளையும் தாமதம்!

கொழும்பு, மார்ச் 30

கரையோர புகையிரத மார்க்கத்தில் இன்றும் நாளையும் ரயில்கள் தாமதமாகும் என்று புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பம்பலப்பிட்டி ரயில் நிலையம் அருகில் மேற்கொள்ளப்பட்டுவரும் திருத்தப் பணிகளாலேயே நேற்று முதல் ரயில்கள் தாமதமாகின என்று பிரதிப் பொது முகாமையாளர் என். ஜே. இந்திபோலகே தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, கொழும்பில் இருந்து வெள்ளவத்தை வரையான ரயில் போக்குவரத்து நடவடிக்கைகள் ஒரே வழியில் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் சில சமயங்களில் ரயில் சேவைகள் இரத்து செய்ய நேரிடலாம் எனவும் பிரதி பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# நெல்லியடியில் கோடா சிக்கியது

வடமராட்சி, மார்ச் 29

நெல்லியடி பொலிஸ் பிரிவில் 600 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டது.

காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் புதன்கிழமை நடத்திய சுற்றிவளைப்பிலேயே இது கைப்பற்றப்பட்டது.

600 லீற்றருக்கும் மேற்பட்ட கோடாவும் கசிப்பு காய்ச்சுவதற்கான உபகரணங்களும் இதன்போது பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. எனினும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் எவரும் கைது செய்யப்படவில்லை. (ஐ)

# சிறார் ஆபாச படங்களை நீக்க இணைய வழிமுறை அறிமுகம்!

## ஜனாதிபதி தலைமையில் நடந்தது

கொழும்பு, மார்ச் 30

இணையத்தில் பதிவேற்றப்படும் சிறுவர்களின் ஒளிப்படங்கள் மற்றும் ஆபாச காணொலிகளை உடனடியாக நீக்குவதற்கான இணைய வழி முறைமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அல்லது சிறுவர்கள் சிக்கிக்கொள்ளக்கூடிய இணையபக்கங்கள், ஒளிப்படங்கள், காணொலிகள் உள்ளிட்டவைகளால் சிறுவர்கள் பெருமளவில் சைபர் வலையமைப்பில் பாதிப்புக்கு ஆளாகின்றனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை உலகின் முன்னணி இணைய சிறுவர் பாதுகாப்பு உறுதிப்படுத்தல் நிறுவனங்களில் ஒன்றான இணைய கண்காணிப்பு அறக்கட்டளையுடன் (Internet Watch Foundation) இணைந்து இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சேவ் த சில்ட்ரன் அமைப்பு இந்த விடயத்துக்கான நிதி உதவியை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த இணைய வழி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் www.childprotection.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசித்து இணையத்தில் பரிமாறப்படும் சிறுவர்களின் துஷ்பிரயோக ஒளிப்படங்கள், காணொலிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய புகைப்படங்கள் குறித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உதவியுடன் முறைப்பாடு செய்ய முடியும்.

பின்னர், அந்த காணொலிகள் இணையத்தில் இருந்து அகற்றப்பட்டு சந்தேகநபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள 011-277 8911 என்ற இலக்கத்தைத் தொடர்பு கொள்ளுமாறு ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# பெரமுன கட்சிக்குள் பிளவு!

கொழும்பு, மார்ச் 30

சிறீ லங்கா பொதுஜன பெரமுன பிளவுபடும் நிலை உருவாகியுள்ளது. ஜனாதிபதி தேர்தலில் கட்சியின் வேட்பாளரை நிறுத்தவேண்டும் என ஒரு தரப்பினரும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என மற்றொரு தரப்பினரும் உறுதியாக நிற்பதே இந்தப் பிளவுக்கு காரணம் என்று அந்தக் கட்சி வட்டாரங்களை ஆதாரம் காட்டி கொழும்பின் பிரபல ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ராஜபக்ஷ குடும்பத்துக்கு ஆதரவான தரப்பினர் கட்சி தனது சொந்தவேட்பாளரை நிறுத்தி தேர்தலில் போட்டியிடவேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

கட்சியின் நிறைவேற்றுகுழுவின் கூட்டத்தில் இந்த கருத்து வெளியாகியுள்ளது. எனினும், தேர்தல் திகதி அறிவிக்கப்படாததால் இது குறித்து கட்சி இன்னமும் தீவிரமாக ஆராயவில்லை.

இதேவேளை, அரசாங்கத்தில் அமைச்சரவை பதவிகளை வகிக்கும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் அவருக்கே ஆதரவளிக்கவேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறக்கூடிய திறமையுடைய எவரும் கட்சியில் இல்லை எனத் தெரிவித்துள்ள பிரசன்ன ரணதுங்க இதன் காரணமாக கட்சி தனது வேட்பாளரை நிறுத்தக்கூடாது என தெரிவித்துள்ளார். (ஐ)

# கருத்துக்கணிப்பில் அநுரவே முன்னிலை

கொழும்பு, மார்ச் 30

தேசிய மக்கள் சக்தி மீதான மக்களின் விருப்பு தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது என்று கருத்து கணிப்புகள் கூறுகின்றன.

சுகாதாரக் கொள்கைகளுக்கான நிறுவனம் முன்னெடுத்த ஜனாதிபதி தேர்தல் தொடர்பான கருத்துக்கணிப்பில், 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் பெப்ரவரி மாதத்தில் பெரும் மாற்றங்கள் இல்லை. இதன்படி, 53 வீத அங்கீகாரத்துடன் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தொடர்ந்தும் முன்னிலை வகிக்கின்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு 34 வீத மக்களின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு 6 வீதமும், சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு 7 வீதமும் மக்களின் அங்கீகாரம் கிடைத்துள்ளன. 16 ஆயிரத்து 248 பேரிடம் இந்தக் கருத்து கணிப்பு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### கல்முனை வடக்கு பிரச்னை:

# ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்தது போராட்டம்!




**கல்முனை, மார்ச் 30**

**கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக பொதுமக்கள் ஐந்தாவது நாளாக நேற்று கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.**

இந்த பிரதேச செயலகம் முன்பாக கடந்த திங்கட்கிழமை பொதுமக்கள் பல்வேறு சுலோகங்களை உள்ளடக்கிய பதாகைகள் தாங்கிய வண்ணம் அமைதி வழியில் ஒன்றுகூடி போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இதன் தொடர்ச்சியாக ஐந்தவாது நாளான நேற்றும் பல்வேறு சுலோகங்களை முன்வைத்து போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டனர். நேற்றைய போராட்டத்தில் சேனைக்குடியிருப்பு விதாதா தையல் பயிற்சி நிலைய மாணவிகள் ஈடுபட்டனர்.

மேலும், கடந்த காலங்களில் உதவி அரசாங்க அதிபர் பிரிவாகச்செயல்பட்டு வந்த மேற்குறித்த பிரதேச செயலகம் 1988களில் தனியான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டது. தொடர்ந்து 1993ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தனியான பிரதேச செயலகமாக கடந்த 30 வருடகாலமாக இயங்கி வருகிறது. இருந்த போதிலும், ஒரு சில அரசியல்வாதிகள் தொடக்கம் உயரதிகாரிகள் வரை குறித்த பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறைகளை மேற்கொள்வதால் பொதுமக்களான தாங்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம்பெற்று வரும் சூழ்ச்சிகளையும் நிருவாக அடக்குமுறைகளைக் கண்டித்தும் திட்டமிடப்பட்டு பிரதேச செயலக உரிமைகளை ஒடுக்கும் நிருவாக அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாதெனவும் அரசாங்கம் இன்னும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வை தரும் வரை தனது அமைதிப் போராட்டம் தொடரும் எனவும் மக்கள் தெரிவித்தனர். (ஐ)

## பெரிய கல்லாறு விபத்தில் மாணவன் உயிரிழப்பு!

மட்டக்களப்பு, மார்ச் 30

வேகத்தால் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் மாணவன் ஒருவர் உயிரிழந்தார். அவருடன் சென்ற மற்றொரு மாணவன் காயமடைந்தார்.

மட்டக்களப்பு - களுவாஞ்சிகுடி - பெரியகல்லாறு பகுதியில் புதன்கிழமை இரவு இந்த விபத்து இடம்பெற்றது.

அதிவேகத்தாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இதில், சந்திரகாந்தன் சதுசன் - வயது 16 என்பவரே உயிரிழந்தார்.

படுகாயமடைந்த மற்றைய மாணவர் மட்டு. போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

## சொறிக்கல்முனை திருச்சிலுவை தலத்தில் புனித வெள்ளி அனுஷ்டிப்பு



மட்டக்களப்பு, மார்ச் 30

கிழக்கு மாகாணத்தின் சிறப்புமிக்க பழம்பெரும் திருத்தலமான சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தலத்தில் இயேசுவின் பாடுகளை நினைவுகூரும் திருச்சிலுவைப் பாதை பெரிய வெள்ளிக்கிழமையான நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட கிறிஸ்தவ பக்தர்கள் இயேசு சிலுவையில் அறையப்பட்டதை நினைவுகூரும் வகையில் சிலுவைகளை சுமந்தவாறு 6ஆம் கொலனி அந்தோனியார் ஆலயம் மற்றும் வீரமுனை சந்தி ஆகியவற்றிலிருந்து பவனியாக சம்மாந்துறை சொறிக்கல்முனை பிரதான வீதிவழியாக திருத்தலத்தை வந்தடைந்தனர்.

சொறிக்கல்முனை திருச்சிலுவை திருத்தலத்தின் பங்குத்தந்தை சுலக்சன் அடிகளாரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பல்வேறு இடங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கானவர்கள் பங்கேற்றனர். (ஐ)

## பாடசாலையில் சிறுவன் மரணம் கைதான பெண்ணுக்கு மறியல்!

மட்டக்களப்பு, மார்ச் 30

நன்னடத்தை பாடசாலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் கைதான மேற்பார்வையாளரான பெண்ணை மீண்டும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கல்முனை சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் அந்தப் பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண் சந்தேகத்தில் கல்முனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண் கடந்த புதன்கிழமை மீண்டும் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்பாக முற்படுத்தப்பட்டார். இதன்போதே நீதிவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

முன்னதாக, அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இஸ்லாமபாத் பகுதியிலுள்ள பெண்கள் சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் கடந்த நவம்பர் மாதம் 17ஆம் திகதி மணி ஒன்றை களவு எடுத்தார் என்ற குற்றச்சாட்டில் கொக்குவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். நீதிமன்ற உத்தரவின்படி அந்த சிறுவன் நன்னடத்தை பாடசாலையில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் மரணமானான். இது தொடர்பில் நன்னடத்தை பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தென்கிழக்கு பல்கலையில் இப்தார் கொண்டாட்டம்!

அக்கரைப்பற்று, மார்ச் 30

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் புவியில்துறை மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த புனித ரமழான் இப்தார் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கலை கலாசார பீடத்தின் புவியியல் துறையின் பல்லின மாணவர்கள் பங்குகொண்ட இந்நிகழ்வில் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம். எம். பாஸில், புவியியல் துறைத் தலைவர் கே. நிஜாமிர், சிரேஷ்ட பதிவாளர் எம்.ரீ. அஷ்ஹர் மற்றும் துறை தலைவர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)





## மட்டக்களப்பில் குருதி தானம்!

மட்டக்களப்பு, மார்ச் 30

மட்டக்களப்பு மாவடிவேம்பு உளநல புனர்வாழ்வு நிலையத்தில் கிழக்கு பல்கலைக்கழக கலை, கலா சார பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நடைபெற்றது.

‘உதிரம் கொடுத்து உயிர் காப்போம்’ எனும் தொனிப்பொருளில் நடந்த இந்த இரத்ததான முகாமில் மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பொதுமக்கள், எனப் பலர் கலந்து கொண்டு குருதி தானம் செய்தனர். (ஐ)

# இஸ்ரேல் தனித்து செயல்பட தயார்!

## பிரதமர் நெதன்யாகு அறிவிப்பு

ஜெருசலேம், மார்ச் 30

**ரபா நகரின் மீது போர் தொடுத்தால் மக்கள் வேறு இடங்களுக்கு பாதுகாப்பாக இடம்பெயர்ந்து செல்ல முடியும். தேவையேற்பட்டால் இஸ்ரேல் தனித்தும் செயல்படும் - இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளார்.**

ரபா நகரின் போர் தொடுப்பதற்கு இஸ்ரேல் ஆயத்தமாகி வருகிறது. இதனால் மிகப்பெரிய மனித அழிவு ஏற்படலாம் என அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் எச்சரித்தன. அத்துடன், இந்த நடவடிக்கை மூலம் இஸ்ரேல் உலகிலிருந்து தனித்து செயல்பட வேண்டி வரும் என்று அமெரிக்கா எச்சரித்தது. இந்த நிலையிலேயே இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு மேற்கண்டவாறு கூறினார்.

"காசாவின் ஒட்டுமொத்த மக்கள்தொகையான 23 இலட்சம் பேரில் அரைவாசிக்கும் மேற்பட்ட மக்கள் ராபாவின் தற்காலிக முகாமில் தஞ்சமடைந்துள்ள நிலையில், போரில் இருந்து தப்புவதற்கு அங்குள்ள மக்கள் எளிதாக இடம்பெயர்ந்து செல்ல முடியும்.

"ரபா விவகாரம் குறித்த முரண், நட்பு நாடுகளுக்கு இடையேயான விரிசல்களில் மற்றுமொன்று எனத் தெரிவித்தவர், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் ஆதரவை நாங்கள்



வரவேற்கிறோம். இஸ்ரேல் தேவைப்பட்டால் தனித்தும் செயல்படும் - என்றும் கூறினார்.

போர் கட்டுப்படுத்தப்பட்ட பகுதியான மத்திய காசாவுக்கு மக்களை இடம்பெயர செய்ய அறிவுறுத்தும் திட்டம் தம்மிடம் உள்ளதாகவும் இஸ்ரேல் கூறியுள்ளது. (ஐ)

# பேருந்து விபத்தில் 45 பேர் உயிரிழப்பு!

## தென்னாபிரிக்காவில் சோகம்



ஜோகன்னர்ஸ்பேர்க், மார்ச் 30

தென்னாபிரிக்காவில் பேருந்து ஒன்று பாலத்தில் இருந்து 165 அடி பள்ளத்தில் விழுந்ததில் 45 பேர் உயிரிழந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் உயிர்பிழைத்த 8 வயது சிறுமி படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணமான லிம்போபோவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பொற்ஸ்வானா நாட்டின் தலைநகர் கபோரோனில் இருந்து உயிர்த்த ஞாயிறு தினத்துக்காக பயணித்த யாத்திரீகர்களே இந்த விபத்தில் உயிரிழந்தனர்.

தென்னாபிரிக்காவின் முக்கிய நகரான ஜோகன்னஸ்பேர்க்கிற்கு வடக்கே 300 கி. மீ. தொலைவில் உள்ள மலைப்பாதையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பேருந்து விழுந்து தீப்பிடித்து எரிந்தது. இதில், படுகாயங்களுடன் மீட்கப்பட்ட 8 வயது சிறுமி தவிர ஏனைய அனைவரும் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# வடகொரியா மீதான அமெரிக்க தீர்மானம் ரஷ்யாவால் முறியடிப்பு



நியூயோர்க், மார்ச் 30

வடகொரியா மீதான பொருளாதார தடையை ஐ. நா. மேற்பார்வை செய்யும் தீர்மானத்தை தனது வீற்றோ அதிகாரத்தை பயன்படுத்தி தடுத்தது ரஷ்யா.

வட கொரியாவுக்கு எதிரான ஐ. நாவின் பொருளாதார தடைகளை நிபுணர்களை கொண்டு மேற்பார்வை செய்யும் தீர்மானத்தை ஐ. நா. பாதுகாப்பு சபையில் அமெரிக்கா கொண்டு வந்தது. பாதுகாப்பு சபையின் 20 நாடுகளில் 13 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

ஆனால், ரஷ்யா தனது வீற்றோ அதிகாரத்தை பயன்படுத் அந்த தீர்மானத்தை தடுத்தது. இதேநேரம் சீனா இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. (ஐ)

# எண்ணிம நாணய பரிமாற்ற மோசடி; ப்ரைட்டுக்கு 25 ஆண்டுகள் சிறை!



நியூயோர்க், மார்ச் 30

எண்ணிம நாணயத்தை (crypto currency) பரிமாற்றம் செய்யும் நிறுவனமான எவ். ரி. எக்ஸ் நிறுவனத்தின் இணை நிறுவுநரான ப்ரைட் தனது வாடிக்கையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களை ஏமாற்றியமைக்காக 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கிரிப்டோ கிங் என அழைக்கப்படும் இவர் தனது நிறுவனம் திவாலாகும் முன்னர் கடந்த 2022 ஆம் ஆண்டு வாடிக்கையாளர்களிடமிருந்து பல நூறு கோடி டொலர்களை திருடியமை நிரூபிக்கப்பட்டதை அடுத்து இந்தத் தண்டனையை நியூயோர்க்கின் பெடரல் நீதிமன்றம் விதித்தது.

"32 வயதே ஆன ப்ரைட் நீதிமன்றத்தில், "நிறைய மக்கள் உண்மையில் ஏமாற்றமடைந்ததாக உணர்கிறார்கள். அதற்காக நான் வருந்துகிறேன். ஒவ்வொரு கட்டத்திலும் நடந்தவற்றைப் பற்றி நான் வருந்துகிறேன்" என்று தண்டனைக்கு முன்னதாக நீதிமன்றில் தெரிவித்தார்.

எவ். ரி. எக்ஸ் நிறுவனம் உலகின் மிகப்பெரிய எண்ணிம நாணய பரிமாற்றங்களில் ஒன்றாக இருந்தது. எண்ணிம நாணயங்களை வாங்கவும் விற்கவும் இந்தத் தளத்தில் பல மில்லியன் பேர் வாடிக்கையாளர்களாக இருந்தனர். 2022இல் நிதிச் சிக்கலில் சிக்குண்ட இந்த நிறுவனம் மாபெரும் சரிவை சந்தித்தது. இந்த சரிவுக்கு முன்னதாக அதன் வாடிக்கையாளர்களிடம் ப்ரைட் 800 கோடி டொலர்களுக்கு - இலங்கை மதிப்பில் சுமார் 2 இலட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் திருடினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

# ஒலிம்பிக் பாதுகாப்பில் பிறநாடுகளின் படைகள்

பாரிஸ், மார்ச் 30

பிரான்ஸில் ஜூலையில் தொடங்கவுள்ள உலக விளையாட்டு விழா "போர்க் கால ஒலிம்பிக்" என்று வர்ணிக்கப்பட்டுவரும் நிலையில், அதன் பாதுகாப்புத் தொடர்பாகப் பிரான்ஸ் தீவிர கவனம் செலுத்திவருகிறது.

போட்டிகளைப் பாதுகாப்பான சூழ்நிலையில் நடத்தி முடிப்பதற்கு உதவுவதற்காக "சில வெளிநாடுகளின்" படையினர் பாரிஸ் வருகின்றனர் என்று தகவல் வெளியாகி இருக்கிறது. மிகப் பிரமாண்டமான நிகழ்வுகளின்போது இவ்வாறு வெளிநாட்டுப் படைகள் உதவிக்கு வருவது வழக்கம் என்று பாதுகாப்பு அதிகாரிகள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

ஜூலை 26 முதல் ஒகஸ்ட் 11 வரை போட்டிகளின் போது தேவைப்படும் இடங்களில் பாதுகாப்பை உறுதிப்படுத்த பல நாடுகள் உதவவுள்ளன.

போலந்து அரசு அதன் விசேட துருப்பினர்களைப் பாரிஸுக்கு அனுப்பவுள்ளது. ஆயினும் எத்தனை பேர் வருகைதருவர் என்ற விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

பிரான்ஸின் பாதுகாப்பு அமைச்சரது தகவலின்படி, 45 ஆயிரம் பொலிஸார், 18 ஆயிரம் படையினர் ஒலிம்பிக் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். இதில், வான்வழி கண்காணிப்புக்குப் பொறுப்





பான 3 ஆயிரம் விமானிகளும் அடங்குவர். இவர்களை விட 18 ஆயிரம் முதல் 22 ஆயிரம் பேர் வரையான தனியார் பாதுகாப்புச் சேவையாளர்களும் கடமைக்காக இணைக்கப்படவுள்ளனர்.

இவர்கள், போட்டியை காண வரும் ரசிகர்களையும் அந்த ஒலிம்பிக் போட்டி நடைபெறும் இடங்களையும் வடிகட்டி சோதனையிடுவர் - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தேர்தல் செலவினம் ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்த முடிவு

## தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர்

### *வாக்களித்தோருக்கு விரலில் மையிடும் செயல்பாட்டை நிறுத்துவதற்கும் திட்டம்

**கொழும்பு, மார்ச் 30**

**தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டத்திலும் சில பிரச்னைகள் இருக்கின்றன. அது தொடர்பில் அனைத்துக் கட்சி தலைவர்களுடனும் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஊடக நிறுவனங்களுக்கு பிரச்னைகள் இருக்குமானால் அது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு மாற்று யோசனைகளை அறிவிக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்தார்.**



தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகள், சுயேச்சை குழுக்களின் வேட்பாளர்களின் தேர்தல் பிரசார செலவினத்தை ஒழுங்குபடுத்ததல் தொடர்பான ஊடக நிறுவனங்களுடனான சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரத்துக்கு பணம் பெரும் அழுத்தம் கொடுக்கக் கூடிய ஒன்றாகும். பணத்தின் மூலம் மக்களின் நிலைப்பாட்டை மாற்ற முடியும். இதனால் பண பலம் இல்லாத வேட்பாளர்களுக்கு தேர்தலில் அநீதி ஏற்படுவதற்கு இடமிருக்கிறது. இதனை கட்டுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வருகிறது. என்றாலும் 2010 காலப்பகுதியிலேயே தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தும் சட்டம் தொடர்பில் அதிகம் கலந்துரையாடப்பட்டு வந்தது.

தேர்தலில் வேட்பாளர்களின் தேர்தல் செலவினத்தை கட்டுப்படுத்த எந்தச் சட்டமும் இல்லாமல் இருந்த நிலையில் தற்போது இந்த சட்டம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்டத்தில் சில பிரச்னைகள் இருக்கின்றன. அதில் திருத்தம் செய்வதற்கு நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

அத்துடன் தற்போது வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய அனுமதிக்கப்பட்ட ஆவணம் ஒன்றை காண்பிக்க வேண்டும் என்பது சட்டமாக்கப்பட்டுள்ளதால், திருட்டு வாக்கு பதிவது கடினம். அதனால் தற்போதும் நடைமுறையில் இருக்கும் விரலுக்கு மை பூசுவதை இரத்துச் செய்யவும் பிரேரணை முன்வைத்திருக்கிறோம் .

இதேவேளை, தேர்தல் வேட்பாளர்களின் தேர்தல் செலவின தொகை வித்தியாசப்படும். அதனால் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் அதுதொடர்பான வழிகாட்டல் ஒன்றை தேர்தல் ஆணைக்குழுவால் ஊடகங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

(ஐ)

# பொது பரிசோதகரை சுடுவதற்கு முயற்சி!

கொழும்பு, மார்ச் 30

பொதுச் சுகாதார பரிசோதகர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்த முயன்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர் .

கம்பஹா - ராகம - மத்துமகலவில் உள்ள பொதுச் சுகாதார பரிசோதகர் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் அவரை சுட முயன்றனர் என்று கூறப்படுகின்றது.

அவர்களின் முயற்சி தோல்வியடைந்த நிலையில் அங்கிருந்து ஆயுததாரிகள் தப்பிச் சென்றுள்ளனர். அந்தப் பகுதியில் இருந்த சி. சி. ரீ. வி. கமெரா பதிவுகளை ஆதாரமாகக் கொண்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# 500 ரூபாய் இலஞ்சம் வாங்கிய பொலிஸ் சார்ஜண்டுக்கு சிறை!

கொழும்பு, மார்ச் 30

ஓட்டோ சாரதி ஒருவரிடம் இலஞ்சம் பெற்ற பொலிஸ் சார்ஜண்ட் ஒருவருக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

போக்குவரத்து விதிமீறல் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதை தவிர்ப்பதற்காக ஓட்டோ சாரதி ஒருவரிடம் 500 ரூபாவை பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜண்ட் குற்றவாளியாக இனம் காணப்பட்டார்.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அவருக்கு எதிராக 4 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்கு தாக்கல் செய்திருந்தது.

இதன்படி 4 குற்றச்சாட்டுகளிலும் குற்றவாளியாக இனம் காணப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட், குற்றவாளி என நீதிவான் நீதிமன்ற நீதிபதி பிரசன்ன அல்விஸ் அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் தலா 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன், சிறைத்தண்டனையை ஒரே நேரத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான பொலிஸ் சார்ஜண்ட் மீது ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 5 ஆயிரம் ரூபாய் வீதம் 20 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன், இலஞ்சமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட 500 ரூபாயை பண அபராதமாக மீளப் பெற்றுக் கொள்ளுமாறும் நீதிமன்றம் மேலும் உத்தரவிட்டுள்ளது.

(ஐ)

# எந்தத் தேர்தல் முதலில் கட்சியினர் தீர்மானிக்கலாம்!

## பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 30

எந்தத் தேர்தல் முதலில் நடைபெற வேண்டும் என்பதை நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள் என முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் நிறைவேற்றுக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்ற தேர்தலை நடத்துங்கள் என என்னுடைய தனிப்பட்ட கருத்தையே நான் ஜனாதிபதியிடம் தெரிவித்தேன். கட்சி இது குறித்து கலந்தாராய்ந்து தீர்மானத்தை எடுக்கலாம் என்றும் பஸில் கூறியுள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களின் சந்திப்பின் பின்னரே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# பரந்த கூட்டணி அழைத்தால் ஜனாதிபதி தேர்தலில் போட்டி

## சம்பிக்க ரணவக்க அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 30

பரந்துபட்ட அரசியல் கூட்டணி மூலம் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குமாறு அழைப்பு விடுத்தால் வேட்பாளராக களமிறங்க தயார் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பு - ஹோமாகமவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் பலமான அரசியல் கூட்டணி ஒன்று தோற்றம் பெற வேண்டும். பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைக்கும் வகையில் தேசியத்துக்காக ஒன்றிணைவோம்“ செயல்திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளோம்.

புதிய அரசியல் கூட்டணிக்கான பேச்சுகளை முன்னெடுத்துள்ளோம். தேர்தல் வெற்றியை மாத்திரம் இலக்காகக் கொண்டு அரசியல் கூட்டணிகள் அமைக்கப்பட கூடாது. சிறந்த அரசியல் கூட்டணி ஒன்று அமைக்கப்படும் நிலையில் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குமாறு அழைப்பு விடுத்தால் அதனை ஏற்க தயார்.

அரசமைப்பின் பிரகாரம் எதிர்வரும் செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஷர்கள் பொறுப்புக் கூற வேண்டும் என்பதை உயர்நீதிமன்றம் தெளிவாக அறிவித்துள்ளது. இழக்கப்பட்டுள்ள மக்கள் செல்வாக்கை மீண்டும் புதுப்பித்துக் கொள்வதற்கு ராஜபக்ஷர்கள் முயற்சிக்கிறார்கள் - என்றார்.

# ஜனாதிபதி வேட்பளாரக ரணிலே பொருத்தம் நாமல் ராஜபக்ஷவுக்கு இன்னும் காலம் உள்ளது!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, மார்ச் 30

ஜனாதிபதி தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டும். அந்தப் பதவிக்கு பொருத்தமானவர் ரணில் விக்கிரமசிங்கவே. நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட 5 முதல் 10 ஆண்டுகள் காலஅவகாசம் உள்ளது - வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டை மீட்க பாராளுமன்ற தேர்தலை விட ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதே சிறந்தது. நிலையான அரசாங்கத்தின் மூலமே நாட்டை மீட்டெடுக்க முடியும். தற்போதைக்கு பாராளுமன்றத் தேர்தலின் மூலம் நாட்டில் நிலையான ஆட்சி கிடைக்காது. நாடு எதிர்கொண்டுள்ள நிலைமையில் இருந்து மீள்வதற்கு நிலையான அரசாங்கம் ஒன்றை நியமிக்க வேண்டும். ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பாராளுமன்றத் தேர்தலை நடத்தி அதனை அமைக்க முடியும்.

ஜனாதிபதி கோட்டாபய காலத்தில் உறுதியற்ற நிலையில் இருந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஸ்திரப்படுத்தியதாக தெரிவித்த ரணதுங்க சிறீ லங்கா பொதுஜன பெரமுன ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மொட்டு கட்சியில் முன்னிறுத்துவதற்கு பொருத்தமான வேட்பாளர் இல்லை எனவும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

மொட்டு கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியில் பசில் ராஜபக்ஷ இருந்தால் நல்லது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட நாமல் ராஜபக்ஷவுக்கு 5 முதல் 10 வருடங்கள் உள்ளன - என்றும் கூறினார்.

(ஐ)

# யாழ். போதனாவில் மாலை 6 மணி வரை வெளிநோயாளர்கள் சிகிச்சை பெறலாம்

## மருத்துவமனை பணிப்பாளர் அறிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு மாலை ஆறு மணி வரை செயல்படும் என யாழ் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை யாழ் போதனா வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடந்த மருத்துவமனையின் அபிவிருத்தி குழு தீர்மானங்களை அறிவித்து கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

மேலும்,

யாழ். போதனா வைத்தியசாலையில் வெளி மாவட்டங்களில் இருந்து வெளிநோயாளர் பிரிவில் அதிகளவில் சிகிச்சை பெறுவதற்கு வருகிறார்கள்.

இதன் காரணமாக வெளி நோயாளர் பிரிவை போயா தவிர்ந்த கிழமை நாட்களில் மாலை 6 மணி வரை இயக்குதவற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, யாழ். போதனா மருத்துவமனயின் செயல்பாடுகளை விஸ்தரிப்பதற்கு இட வசதி மற்றும் ஆளணி எமக்குள்ள ஒரு பெரும் சவாலாகும்.

இருந்த போதும் எம்மிடம் காணப்படுகின்ற வளங்களை உரிய முறையில் பயன்படுத்தி சேவையாற்றி வருகின்றோம். எமது தேவைப்பாடுகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் எடுத்துரைத்துள்ளோம்.

அவர் எமது தேவைகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த கூட்டத்தில், யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி குழு தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் யமுனானந்தா, வைத்திய சாலை கணக்காளர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(ஐ)

### பூமியின்...

பனிக்கட்டி உருகுவதன் காரணமாக பூமியின் மையப்பகுதியில் ஏற்படும் மாற்றங்களால் பூமியின் சுழற்சி வேகம் அதிகரித்து இதன் மூலம் பூமியின் நேரம் மாறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஒரு விநாடி என்பது மிக குறுகிய காலப்பகுதி என்ற போதிலும், அது கணினி பயன்பாட்டில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். (ஐ)

### 13ஐ...

உறவுகளுக்கு நஷ்டஈட்டை வழங்க வேண்டும். அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை நேர்மையாக தெரிவிக்க வேண்டும்.

சட்டவிரோதமான சட்டங்களை இல்லாது ஒழிக்கவேண்டும். இந்த நாடு ஜனநாய நாடு என்ற அடிப்படையில் ஆர்ப்பாட்டங்களை நடத்தும் உரிமை நிலைநிறுத்தப்பட வேண்டும். மலையக மக்களின் காணி உரிமை - வீட்டுரிமை ஆகிய வற்றை உறுதிப்படுத்தி உத்தரவாதப்படுத்த வேண்டும் - என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

### பலத்த...

தினமான ஏப்ரல் 21ஆம் திகதி மூன்று தேவாலயங்கள் உட்பட 8 இடங்க ளில் தற்கொலை மற்றும் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதில், 270 பேருக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். பலர் அங்கவீனர்களா கினர். இதைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் உயிர்த்த ஞாயிறு கொண்டாட்டத்தின் போது தேவாலயங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்படுவது வழமையாகும்.

### சஜித்...

கட்சியில் இணைத்துக்கொள்ள நாம் தயாரில்லை. கொள்கைகளுடன் கட்சியில் இணைய விரும்புபவர்களையே இணைத்துக்கொள்வோம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், மேதினத்தில் பலர் எமது கூட்டணியின் மேடையில் ஏற உள்ளதாகவும் அவர் கூறினார். (ஐ)

### உலகின்...

அதிகாரம், எனது தாத்தா சி. எல். விக்கிரமசிங்க உட்பட அந்தக் காலத்தைச் சேர்ந்த பலரும் இலங்கையர் என்ற அடையாளத்தை நிலைநாட்ட விரும்பிய தாலேயே சிங்கள விளையாட்டுக் கழகத் தில் இணைந்தனர். சுதந்திரத்திற்குப் பின்னர் எனது தந்தையாரும் இணைந்தார்.

அன்று இவ்வாறான விளையாட்டுக் கழகங்களை உருவாக்கினோம். தமிழ் சமூகமும் விளையாட்டுக் கழகங்களை உருவாக்கின. அவை இன மோதலுக்காக அன்றி, பல்வேறு கழகங்கள் வாயிலாக தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் முயற்சியாகும். அவை மதம் அல்லது குலத்தை மையப்படுத்தியவை அல்ல. மாறாக மொழி மற்றும் கலாசாரத்தை அடிப்படையாக கொண்டவையாகும். மலாயர்களும் தங்களுக்காக கழகத்தை உருவாக்கியிருந்தனர். அவற்றில் சிங்களவர், தமிழர், மலாயர் என அனைவரும் ஒன்று சேர்ந்துக் கொண்டனர். பின்னாளில் அனைவரும் ஒன்றிணைந்து பொது அடையாளத்தைப் பெற்றுக்கொண்டோம்.

இந்த வருடம் கிரிக்கெட் வளர்ச்சிக்காக அரசாங்கம் 100 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. அடுத்த வருடம் மேலும் அதிக தொகையை வழங்குவோம் - என்றார். (ஐ)

# முழுப்பூசணியை சோற்றில் மறைக்கவே பிள்ளையான் புத்தகம் எழுதினார்!

## கருணா குற்றச்சாட்டு



மட்டக்களப்பு, மார்ச் 30

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஆசாத் மௌலானா சிறந்த ஆதரங்களுடன் நிரூபித்துள்ளார். இந்த நிலையில் இந்தத் தாக்குதலை ஏவியவர்களால் அது தொடர்பான புத்தகம் வெளியிடப்பட்டது என்பது முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைப்பதற்காக எழு தப்பட்டதாகவே பார்க்கப்படுகின்றது என்று தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் கருணா என்று அறியப்பட்ட விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் ஜனாதிபதித் தேர்தல் வருகின்ற காலகட்டத்தில் அனைத்து உண்மைகளும் வெளிவருவதற்கு வாய்ப்பு இருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியை பொறுத்த வரையில் ரணில் விக்கிரமசிங்க தேர்தல் களத்தில் இறங்குவாராக இருந்தால் அவருக்கு எமது ஆதரவினை வழங்குவதாக நாங்கள் தீர்மானித்து இருக்கின்றோம் - என்று மட்டக்களப்பில் உள்ள அவரது கட்சி தலைமையகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். (ஐ)

# தமிழர்களின் வாக்குகள் ரணிலுக்கே கிடைக்கும்!

## ரவி கருணாநாயக்கா நம்பிக்கை



கொழும்பு, மார்ச் 30

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் ரணிலுக்கே கிடைக்கும் என ஐக்கிய தேசிய கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தல் இவ்வருடம் நடைபெற்றே தீரும். தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இல்லை.

ஏனெனில், நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராகப் போட்டியிடவுள்ள ரணில்தான் தேர்தலில் வெற்றியடையப் போகின்றார்.

எனவே, அவருக்குத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய தேவையில்லை. அவரின் வெற்றி சரித்திர வெற்றியாகப் பதியப்படும். சிங்கள மக்களுக்கு மாத்திரமில்லாமல் தமிழ், முஸ்லிம் மக்களின் நம்பிக்கை மிகுந்த தலைவராக ரணில் விளங்குகின்றார்.

இதேவேளை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கே கிடைக்கும். 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் விட்ட வரலாற்றுத் தவறை தமிழ் மக்கள் மீண்டும் ஒரு தடவை விடமாட்டார்கள் - என்றார். (ஐ)

### நீதியமைச்சர்...

மூலம் தெரியப்படுத்தியுள்ளது.

தண்டனை சட்டக்கோவையின் 363 மற்றும் 364 ஆம் பிரிவுகளைத் திருத்துவதற் கான சட்ட மசோதா குறித்து பல்வேறு தரப்பினராலும் கடும் எதிர்ப்பு வெளிப்படுத் தப்பட்டதையடுத்து, அச்சட்டமூலம் தொடர்பில் ஆலோசனை கலந்துரையாடல்களை முன்னெடுக்கவிருப்பதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இந்த சட்டமூலமானது 18 வயதை அடையாத ஒருவர் பாலியல் உறவில் ஈடுபடு வதற்குரிய சம்மதத்தை அளிப்பதற்கான தகைமை வயதெல்லையை 16 இலிருந்து 14 ஆகக் குறைப்பதற்கு முன்மொழிகின்றது. அதேபோன்று பாலியல் வன்புணர்வில் ஈடுபடும் நபர் 22 வயதுக்கு குறைந்தவராக (நடைமுறை சட்டத்தின்படி 18 வயதுக்குக் குறைந்தவர்) இருப்பின் அவர் தண்டனையிலிருந்து விலக்கீடு பெறக்கூடிய வாய்ப்பை யும் இத்திருத்தம் வழங்குகின்றது.

இதன்படி, இந்த சட்டமூலம் தொடர்பில் தமது அவதானிப்புக்களையும், பரிந்துரைகளையும் உள்ளடக்கி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நீதிய மைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தெற்காசிய பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகள் பாலியல் உறவில் ஈடுபடுவதற்குரிய சம்மதத்தை அளிப்பதற்கான வயதெல் லையை அதிகரிப்பதன் மூலம் சிறுவர்களை பாலியல் அத்துமீறல்களிலிருந்து பாது காப்பதற்கு முற்படுவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இந்தியாவில் 2012 ஆம் ஆண்டு பாலியல் குற்றங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் மூலம் இந்திய தண்டனைச் சட்டக்கோவையின் 375 ஆம் பிரிவின் கீழ் பாலியல் உறவுக்கு சம்மதம் அளிப்பதற்கான வயதெல்லை 16 இலிருந்து 18 ஆக உயர்த் தப்பட்டுள்ளது.

குறிப்பாக பாலியல் உறவுக்கான வாய்ப்பு மற்றும் வன்புணர்வுக் குற்றத்துக்கான தண்டனை ஆகியவற்றை நிர்ணயிக்கும் போது சிறுவர்களின் நலனுக்கே அரசாங்கம் முன்னுரிமை அளிக்க வேண்டுமென பொது வில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய தண்டனை சட்டக்கோவையின் 364(2) ஆம் பிரிவின்கீழ் சுட்டிக்காட்டப்படும் குற்றவாளி தொடர்பான வயதெல்லையை "18 வயதுக்குக்கீழ்" என்று பேணவேண்டும் என வும், "22 வயதுக்குக்கீழ்" என அதிகரிக் கக்கூடாது எனவும் நாம் பரிந்துரைக்கின் றோம்.

மேலும் குற்றவாளி மற்றும் பாதிக்கப்பட்ட நபருக்கு இடையில் திருமண உறவு இருப்பினும், அதனைக் கருத்திற் கொள்ளாது "வன்புணர்வை" குற்றமாக்குவதற்குரிய வாய்ப்பை உருவாக்கும்படி நாம் அரசாங் கத்தை ஊக்குவிக்கின்றோம் என்று மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## பெரியநீலாவணை இரட்டை கொலை சந்தேகநபருக்கு மீண்டும் மறியல்

அம்பாறை,மார்ச்30

பெரிய நீலாவணையில் பெற்ற பிள்ளைகள் இருவரை கொலை செய்தார் என்ற சந்தேகத்தில் கைதான தந்தையை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெரியநீலாவணையில் கடந்த 14ஆம் திகதி மாற்றுத்திறனாளிகளான இரு பிள்ளைகள் கழுத்தறுத்து கொல்லப்பட்டனர். தந்தை தற்கொலைக்கு முயன்ற நிலையில் காப்பாற்றப்பட்டு, பின்னர் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், வழக்கை எதிர்வரும் ஏப்ரல் 15ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (ஐ)

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சால் நடமாடும் சேவை

கொழும்பு, மார்ச் 30

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினால் “நானே ஆரம்பம் வெல்வோம் சிறீலங்கா ஸ்மார்ட் சூரன்களோடு” வவுனியாவுக்கு ஸ்மார்ட் எதிர்காலம் எனும் தொனிப்பொருளில் நடத்தும் நடமாடும் சேவை வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் , வெளிநாடுகளில் பணிபுரிவோரின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றல், தொழில் வங்கியில் பதிவு செய்தல், வெளிநாடுகளில் பணிபுரிவோருக்கு உரிய நஷ்டஈடு / சம்பளம் / காப்புறுதி தொடர்பான சேவைகள் ,ஈ.பி.எவ்./ஈ. ரி. எவ். தொடர்பான சேவைகள் , தொழிற்துறை பாடநெறிகள் தொடர்பான பதிவு , தொழில்முனைவாளர்களுக்கு அபிவிருத்தி மேம்பாட்டு பயிற்சிகளுக்கான பதிவு , உத்தேச தொழில்வாய்ப்புகள் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு , வெளிநாடுகளில் பணிபுரிவோரின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல் போன்ற பல சேவைகள் இந்த நடமாடும் சேவையூடாக முன்னெடுக்கப்பட்டன.

இந்நிகழ்வில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே. காதர் மஸ்தான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்த நடமாடும் சேவை இன்றைய தினமும் காலை 9.45 மணி முதல் 4.30 மணி வரை நடைபெறும். (ஐ)

## துறைமுக நகருக்கான அதிவேக வீதி ஜுலையில் மக்கள் பாவனைக்கு!



கொழும்பு, மார்ச் 30

கொழும்பு - இங்குறுகடை சந்தியில் இருந்து துறைமுக நகரம் வரை தூண்கள் மூலம் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேம்பால அதிவேக வீதி ஜூலை மாதத்தில் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ளது.

5.3 கிலோமீற்றர் நீளமான இந்த அதிவேக வீதி நான்கு ஒழுங்கைகளைக் கொண்டுள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த அதிவேக வீதியின் 80 வீதமான கட்டுமானப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

இங்குறுகடை, புறக்கோட்டை, அளுத்மாவத்தை, காலி முகத்திடல் மற்றும் துறைமுக நகரம் ஆகிய 5 உள்நுழைவுகளை இந்த அதிவேக வீதி கொண்டுள்ளது.

இந்த அதிவேக வீதியை துறைமுகத்தில் இருந்து இடையூறுகள் இன்றி கொள்கலன்கள் போக்குவரத்துக்கான புதிய உள்நுழைவாக பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் மூலம் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த அதிவேக வீதிக்கு 2 ஆயிரத்து 800 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. (ஐ)

# இலங்கைக்கான பயண ஆலோசனையை புதுப்பிக்க பிரித்தானியா ஆலோசனை

**லண்டன், மார்ச் 30**

**இலங்கைக்கான பயண ஆலோசனைகளை புதுப்பிப்பது தொடர்பில் ஆலோசிக்கப்படுவதாக என பிரித்தானியா தெரிவித்துள்ளது.**

இதேநேரம், தற்போது நடைமுறையில் உள்ள இலங்கைக்கான பயண ஆலோசனைகளை உன்னிப்பாக அவதானிப்பதாகவும் - தொடர்ந்து பரிசீலிப்பதாகவும் பிரித்தானிய பொதுநலவாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அஹ்மத் விம்ளின்டன் பிரபு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தில் சுற்றுலாத்துறை பெரும் பங்காற்றுவதாக நேஸ்பி பிரபு பிரித்தானிய பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். இதனடிப்படையில் இலங்கைக்கான பயண ஆலோசனைகளை பிரித்தானியா புதுப்பிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், இலங்கைக்கான பயண ஆலோசனைகள், தேசிய பாதுகாப்பையும் பிரித்தானிய பிரஜைகளின் பாதுகாப்பை முதன்மையாக கொண்டு தயாரிக்கப்படுவதாக அஹ்மத் விம்ளின்டன் பிரபு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் உள்ள பிரித்தானிய தூதரகம் மற்றும் இலங்கையிலுள்ள சில உள்ளூர் அதிகாரிகளிடமிருந்து கிடைக்கப் பெறும் தகவல்களை பரிசீலித்த பின்னர் பயண ஆலோசிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

### மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில்

# கதிரியக்க தொழில்நுட்பவியலாளர் இன்றும் வேலைநிறுத்த போராட்டம்

மட்டக்களப்பு,மார்ச்30

மட்டக்களப்பு போதனா மருத்துவமனை புற்றுநோய் பிரிவை சேர்ந்த கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் இன்றைய தினமும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இவர்களின் பணிப்புறக்கணிப்பு நேற்றைய தினமும் முன்னெடுக்கப்பட்டது.

மருத்துவமனை பணிப்பாளரின் செயல்பாடுகளுக்கு எதிராக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார்.

குறித்த வைத்தியசாலையிலுள்ள கதிரியக்க பிரிவு ஊழியர்களுக்கு, பணிப்பாளரினால் கடந்த 02 மாதங்களாக மேலதிக நேர கொடுப்பனவுகளுக்கு அனுமதி வழங்கப்படாமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ஐ)

# மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் இரு வாரங்களில் வர்த்தமானியில்!

### எரிசக்தி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 30

மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கிய புதிய மின்சார சட்டமூலம் அடுத்த இரண்டு வாரங்களில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, ஏப்ரல் இறுதி வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பிலான முன்னேற்றத்தை ஆராயும் மீளாய்வுக் கூட்டத்தின் போது இது தொடர்பில் கலந்துரையாடியதாக அமைச்சர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

சட்டமூலத்தை மீளாய்வு செய்த பின்னர், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான உறுதிப்பாடு கடந்த திங்கட்கிழமை சட்டமா அதிபரால் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில், வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் எந்தவொரு நபருக்கும் மீளாய்வு செய்வதற்கு குறைந்தபட்சம் இரண்டு வாரங்கள் அவகாசம் வழங்கப்படும் - என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

# 2,535 ஆசிரிய உதவியாளர்களை இணைக்க விண்ணப்பம் கோரல்

கொழும்பு, மார்ச் 30

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான 2,535 ஆசிரியர் உதவியாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்களை கோருவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அடுத்த சில வாரங்களுக்குள் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மாதத்துக்குள் குறித்த பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்து, அவர்களுக்கு அடிப்படை பயிற்சிகளை வழங்கிய பின், பாடசாலைகளுக்கு அனுப்ப எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பெருந்தோட்டப் பாடசாலைகளில் இன்னமும் பாரிய ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகிறது. கல்வியல் கல்லூரிகளிலும் தகுதி பெறும் மாணவர்கள் மிகக்குறைவு. பட்டதாரிகள் ஒரு சிலரே இருக்கின்றனர் என்று சுட்டிக்காட்டிய அமைச்சர், அதற்கு தீர்வாக தற்போது ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட மாகாண அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆசிரியர் சேவை யாப்பின்படி, தகைமையுடைய 500 ஆசிரியர் உதவியாளர்களை இணைத்துக் கொள்ள கல்வி அமைச்சுக்கு அரச சேவை ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. மூன்று வருடங்களுக்குள் ஆசிரியர் மையங்கள் ஊடாக டிப்ளோமா மட்டத்தில் பயிற்சியளிக்கப்பட்டு பாடசாலைகளுக்கு அனுப்பப்படுவார்கள் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன், நிலையான தீர்வுகளை வழங்குவது சவாலாக இருக்கும் போது, மாற்றுத் தீர்வுகள் மூலம் கல்வி முறையைத் தொடர வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்தார். (ஐ)

# அநுராதபுர சிறைச்சாலையில் கைதிகள் இருவர் தப்பியோட்டம்!

கொழும்பு, மார்ச் 30

அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து இரண்டு கைதிகள் தப்பிச்சென்றுள்ளனர்.

நேற்று பகல் அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் காமினி திஸநாயக்க தெரிவித்தார்.

சிறைச்சாலையின் உணவகத்தில் இருந்து இருவரும் தப்பிச்சென்றுள்ளனர். தப்பிச்சென்ற கைதிகளைத் தேடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டார்.

(ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சூரியகுமார் யாதவின் வருகை தாமதமாகும்!




மும்பை, மார்ச் 30

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரும் இருபது - 20 தரவரிசையில் முதல்நிலை துடுப்பாட்ட வீரரான சூர்யகுமார் யாதவ் ஐ. பி. எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியில் இடம்பெற்றுள்ளார்.

காயத்திலிருந்து குணமடைந்து பயிற்சி மேற்கொண்டு வரும் அவர் ஏற்கனவே 2 போட்டிகளை தவறவிட்டார். அந்த 2 போட்டியிலும் மும்பை அணி தோல்வியை தழுவியுள்ளது. இதனால் மும்பை ரசிகர்கள் அவர் எப்போது களத்திற்கு திரும்புவார் என்று ஏக்கத்துடன் காத்திருக்கின்றனர். இந்நிலையில் சூர்யகுமார் யாதவ் குறித்த தகவல் ஒன்று வெளியாகி உள்ளது.

சூர்யகுமார் யாதவ் சமீபத்தில் குடலிறக்க சத்திர சிகிச்சை செய்து கொண்டார். அவர் தற்போது பெங்களூருவில் உள்ள தேசிய கிரிக்கெட் அக்கடமியில் பயிற்சி மேற்கொண்டு வருகிறார். அவர் போட்டிக்கான முழு உடல் தகுதியை எட்டாததால் மேலும் சில ஐ.பி.எல். போட்டிகளை தவறவிட வாய்ப்புள்ளது என்று கூறப்படுகின்றது. (ஐ)

# மியாமி ஓப்பன் ரென்னிஸ் டிமிட்ரோவ் அரையிறுதியில்



மியாமி, மார்ச் 30

மியாமி ரென்னிஸ் தொடரில் அல்காரஸை இலகுவாக வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார் டிமிட்ரோவ்.

அமெரிக்காவில் மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில், நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ் பல்கேரியாவின் கிரிகோர் டிமிட்ரோவை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தில் அபாரமாக செயல்பட்ட டிமிட்ரோவ் 6-2, 6-4 என்ற நேர் செற் கணக்கில் கார்லஸ் அல்காரஸை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெறும் அரையிறுதி போட்டிகளில் டேனியல் மெத்வதேவ் - ஜொன்னிக் சின்னெர், கிரிகோர் டிமிட்ரோவ் - அலெஸ்சாண்டர் ஸ்வெரேவ் ஆகியோர் மோதவுள்ளனர்.



# ராஜஸ்தானிடம் போராடி தோற்றது டில்லி கப்பிட்டல்ஸ்!

ஜெய்ப்பூர், மார்ச் 30

நடப்பு ஐ. பி. எல் இருபது - 20 தொடரின் 9ஆவது லீக் போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியை 12 ஓட்டங்களால் வீழ்த்தியுள்ளது ராஜஸ்தான் றோயல்ஸ் அணி. இந்தப் போட்டியில் சாஹல், ஆவேஷ் கான், பர்கர் ஆகியோர் ராஜஸ்தான் அணிக்காக சிறப்பாக பந்து வீசி இருந்தனர்.

ஜெய்ப்பூரில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்றி டில்லி அணி முதலில் பந்து வீசத் தீர்மானித்தது.

இதனால், முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 185 ஓட்டங்கள் எடுத்தது. ரியான் பராக் 45 பந்துகளில் 84 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். அஸ்வின் 29, ஜூரல் 20, சஞ்சு சாம்சன் 15 மற்றும் ஹெட்மேயர் 14 ஓட்டங்கள் எடுத்தனர். கடைசி ஐந்து ஓவர்களில் 77 ஓட்டங்கள் எடுத்தது.

186 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை டில்லி அணி விரட்டியது. மார்ச் 23 ஓட்டங்களில் வெளியேறினார். ரிக்கி புஹி ஓட்டம் ஏதும் எடுக்காமல் வெளியேறினார். பின்னர், அணித் தலைவர் ரிஷப் பந்த் மற்றும் டேவிட் வோர்னர் இணைந்து 67 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். வோர்னர் 34 பந்துகளில் 49 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். பந்த் 28 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார். 9 ஓட்டங்களில் அபிஷேக் போரல் வெளியேறினார்.

ட்ரிஸ்ன் ஸ்டப்ஸ் மற்றும் அக்சர் பட்டேல் இணைந்து 51 ஓட்டங்கள் சேர்த்தனர். 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 173 ஓட்டங்கள் எடுத்தது டில்லி அணி. இதன் மூலம் 12 ஓட்டங்களில் ராஜஸ்தான் அணி வெற்றி பெற்றது. ஸ்டப்ஸ், 23 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்திருந்தார். சாஹல் மற்றும் பர்கர் தலா 2 விக்கெட்கள் கைப்பற்றினர். அவேஷ் கான் ஒரு விக்கெட் வீழ்த்தினார்.

கடைசி ஓவரில் டில்லியின் வெற்றிக்கு 17 ஓட்டங்கள் தேவைப்பட்டது. இருந்தும் 4 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்திருந்தார் ஆவேஷ் கான். அதன் மூலம் ராஜஸ்தான் அணியின் வெற்றி உறுதியானது.

நடப்பு தொடரில் இதுவரை நடந்த 9 போட்டிகளிலும் சொந்த மைதானங்களில் விளையாடிய அணிகளே வெற்றி பெற்றுள்ளன. (ஐ)

# டில்லிக்காக 100 போட்டிகளில் விளையாடினார் ரிஷப் பந்த்!

டில்லி, மார்ச் 30

டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்காக 100ஆவது ஐ. பி. எல். போட்டியில் விளையாடும் முதல் வீரர் என்ற பெருமையை ரிஷப் பந்த் பெற்றுள்ளார்.

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் நடந்த ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் அவர் இந்தப் பெருமையைப் பெற்றார்.

இதற்கு முன்பாக டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்காக அமித் மிஸ்ரா 99 போட்டிகள் விளையாடியதே அதிகபட்சமாக இருந்தது.

ஓர் அணிக்காக 100 ஐபிஎல் போட்டிகளில் விளையாடிய முதல் வீரர்கள்

சென்னை சுப்பர் கிங்ஸ் - சுரேஷ் ரெய்னா
மும்பை இந்தியன்ஸ் - ஹர்பஜன் சிங்
றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு - விராட் கோலி
கொல்கத்தா நைற் ரைடர்ஸ் - கௌதம் கம்பீர்




ராஜஸ்தான் றோயல்ஸ் - அஜிங்க்யா ரஹானே
சன் ரைசர்ஸ் ஹைதராபாத் - புவனேஸ்வர் குமார்
டில்லி கப்பிட்டல்ஸ் - ரிஷப் பந்த்

பஞ்சாப் கிங்ஸ் அணிக்காக இதுவரை எந்த ஒரு வீரரும் 100 போட்டிகளில் விளையாடவில்லை. (ஐ)

# ஆஸியின் வீரர்கள் ஒப்பந்தம் வோர்ணர், அஷ்டன் நீக்கம்!

சிட்னி, மார்ச் 30

கிரிக்கெட் அவுஸ்திரேலியாவின் வீரர்கள் ஒப்பந்தத்தில் டேவிட் வோர்ணர், அஷ்டன் அகர், ஸ்ரொய்னிஸ் ஆகியோர் இடம்பெறவில்லை.

கிரிக்கெட் அவுஸ்திரேலியா 2024-2025 ஆண்டுக்கான வீரர்களின் புதிய ஒப்பந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில், சகலதுறை வீரர்களான மார்கஸ் ஸ்ரொய்னிஸ், அஷ்டன் அகர் மற்றும் ரி-20 போட்டியில் மட்டும் ஆடி வரும் டேவிட் வோர்ணர் ஆகியோர் ஒப்பந்தத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். புதிதாக சேவியர் பார்ட்லெட், அரோன் ஹார்டி, மத்தியூ சோர்ட், நதன் எல்லிஸ் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஒப்பந்தத்தில் இடம்பெற்ற வீரர்கள் பட்டியல் -

சீன் அபொட், சேவியர் பார்ட்லெட், ஸ்கொட் பொலண்ட், அலேக்ஸ் ஹாரி, பட் கம்மின்ஸ், நதன் எல்லிஸ், கமரூன் கிறீன், அரோன் ஹார்டி, ஜோஷ் ஹசில்வூட், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்லிஷ், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லபுஷாக்னே, நதன் லயன், மிற்செல் மார்ஷ், கிளென் மக்ஸ்வெல், லான்ஸ் மோரிஸ், டொட் மர்பி, ஜை றிச்சர்ட்சன், மத்தியு சோர்ட், ஸ்ரீவ் ஸ்மித், மிற்செல் ஸ்ரார்க், அடம் ஷம்பா. (ஐ)



டேவிட் கிரிட்டன்

# காஸா போர்: ஐ.நா தீர்மானத்தால் இஸ்ரேல் தனிமைப்படுத்தப்படுகிறதா?




காஸாவில் இஸ்ரேலுடனான போர் நிறுத்தத்திற்கான தற்போதைய முன்மொழிவை ஹமாஸ் நிராகரித்துள்ளதாக இஸ்ரேல் கூறியுள்ளது. உடனடி போர் நிறுத்தம் கோரிய ஐ.நா பாதுகாப்பு சபையின் தீர்மானம் "சேதத்தை" ஏற்படுத்தியுள்ளது என்பதை இது காட்டுகிறது.

பாலஸ்தீன ஆயுதக் குழுவின் ஏற்க முடியாத கோரிக்கைகளுக்கு இஸ்ரேல் அடிபணியாது என்று பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

காஸாவில் இருந்து இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் முழுமையாக வெளியேற வேண்டும் என்றும், போரை நிறுத்தவும் ஹமாஸ் கோரிக்கை விடுத்துள்ளதாக இஸ்ரேல் கூறுகிறது. அதேநேரம் இஸ்ரேலின் அறிக்கை கிட்டத்தட்ட எல்லா விஷயங்களிலும் தவறானது என்று அமெரிக்கா கூறியுள்ளது.

திங்கட்கிழமை ஐ.நா. பாதுகாப்பு சபையில் வாக்கெடுப்பு நடப்பதற்கு முன்னதாகவே ஹமாஸின் அறிக்கை தயாரிக்கப்பட்டதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் வலியுறுத்தியுள்ளார்.

ஹமாஸ் ராணுவப் பிரிவின் துணைத் தலைவர் மர்வான் இசா இரண்டு வாரங்களுக்கு முன்னர் நுசைரத் அகதிகள் முகாமின் சுரங்கப்பாதை வளாகத்தில் நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டதை உறுதி செய்திருப்பதாக இஸ்ரேலிய ராணுவம் தெரிவித்துள்ளது.

**24 மணிநேரத்தில் 81 பேர் பலி**

"உளவுத்துறை அறிக்கைகள் அனைத்தையும் நாங்கள் சரிபார்த்தோம். மார்வான் இசா வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டார்," என்று இதுகுறித்து இஸ்ரேல் ராணுவ செய்தித் தொடர்பாளர் ரியர் அட்மிரல் டேனியல் ஹகாரி தெரிவித்தார்.

இஸ்ரேல் தெரிவிப்பதில் தனக்கு "நம்பிக்கை இல்லை என்றும் அந்த அமைப்பின் ராணுவத் தலைமை மட்டுமே இதுகுறித்து இறுதியாக ஏதாவது சொல்லும்" என்றும் ஹமாஸ் அரசியல் தலைவரான இஸாத் அல் ரிஷ்க் கூறுகிறார்.

இசா இந்தக் குழுவின் "மூன்றாம் நிலையில் இருக்கும் தலைவர்" என்றும், அக்டோபர் 7ஆம் தேதி தெற்கு இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் "முக்கிய ஏற்பாட்டாளர்களில் ஒருவர்" அவர் என்றும் ரியர் அட்மிரல் ஹகாரி கூறியுள்ளார்.

இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலில், 1,200 பேர் கொல்லப்பட்டனர், 253 பேர் பிணைக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து இஸ்ரேல் காஸாவில் பதில் தாக்குதல் மேற்கொண்டது. காஸாவில் இதுவரை 32,400க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாகவும், கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் 81 பேர் உயிரிழந்துள்ளதாகவும் ஹமாஸ் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.



காஸாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக முட்டுக்கட்டை நிலவி வருகிறது. காஸாவில் உடனடியாக போர் நிறுத்தத்தை அமல்படுத்த ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் முதன்முறையாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு எதிராக இஸ்ரேல் கடும் எதிர்வினையைப் பதிவு செய்துள்ளது.

இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக பிரிட்டன் உட்பட 14 பாதுகாப்பு சபை உறுப்பினர்கள் வாக்களித்தனர். போர் நிறுத்தம், மீதமுள்ள பிணைக் கைதிகளை நிபந்தனையின்றி விடுவித்தல் மற்றும் மனிதாபிமான உதவியை விரிவுபடுத்துதல் ஆகியவை இந்தத் தீர்மானத்தில் அடங்கும்.




இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியும் ராணுவ ஆதரவாளருமான அமெரிக்கா, அக்டோபர் 7 தாக்குதலுக்கு ஹமாஸை கண்டிக்கத் தவறிய தீர்மானத்தை விமர்சித்துள்ளது.

இருப்பினும் இஸ்ரேலின் போர் முறைகள் தொடர்பாக அதிகரித்து வரும் கோபம் காரணமாக இந்தத் தீர்மானத்தின் மீது வாக்களிப்பதில் இருந்து அமெரிக்கா விலகிக் கொண்டது. ஆனால் அமெரிக்கா இந்தப் போரின் முக்கிய நோக்கங்களுக்கு முழு ஆதரவளிப்பதாகக் கூறியது.

இந்த முன்மொழிவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இஸ்ரேல், வாஷிங்டனுக்கான தனது தூதுக்குழுவின் பயணத்தை ரத்து செய்துள்ளது. காஸாவின் தெற்கு நகரமான ரஃபாவில் தரைவழித் தாக்குதலை நடத்துவதற்கான திட்டத்தைப் பற்றி விவாதிக்க தூதுக்குழு அங்கு செல்வதாக இருந்தது.

தற்போது 10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் ரஃபாவில் தஞ்சமடைந்துள்ளனர். முழு அளவிலான தாக்குதல் மனித பேரழிவாக நிரூபிக்கப்படலாம் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

பின்னர் ஹமாஸ் போர் நிறுத்த திட்டத்தை நிராகரித்து அறிக்கை வெளியிட்டது. அமெரிக்கா, கத்தார் மற்றும் எகிப்து நாடுகளின் மத்தியஸ்தத்துடன் தோஹாவில் நடைபெற்ற மறைமுக பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்தத் திட்டம் உருவானது.



"நிரந்தர போர் நிறுத்தத்துடன்" காஸாவில் இருந்து இஸ்ரேலிய படைகள் முற்றிலுமாக வெளியேறவும், இடம்பெயர்ந்த பாலஸ்தீனியர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பவும் அழைப்பு விடுத்த தன் அசல் கோரிக்கையைத் தான் பற்றி நிற்பதாக ஹமாஸ் கூறியது.

ஹமாஸின் நிலைப்பாடு, "பேச்சுவார்த்தை மூலமான ஒப்பந்தத்தில் அதற்கு எந்த ஆர்வமும் இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. கூடவே ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானத்தால் ஏற்பட்ட சேதத்தை உறுதிப்படுத்துகிறது," என்று செவ்வாய்கிழமை காலை இஸ்ரேலிய பிரதம மந்திரி அலுவலகம் தெரிவித்தது.

ஹமாஸின் திசை திருப்பும் கோரிக்கைகளை இஸ்ரேல் ஏற்றுக் கொள்ளாது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஹமாஸின் ராணுவ மற்றும் அரசாங்க திறன்களை அழித்தல், எல்லா பிணைக் கைதிகளையும் விடுவித்தல், காஸா, இஸ்ரேலிய மக்களுக்கு எதிர்கால அச்சுறுத்தலை ஏற்படுத்தாததை உறுதி செய்தல் போன்றவற்றை உள்ளடக்கிய தனது போர் நோக்கங்களை இஸ்ரேல் தொடர்ந்து அடையும்," என்றும் அறிக்கை தெரிவிக்கிறது.

**இஸ்ரேலின் பேச்சுவார்த்தைக் குழு திரும்பிவிட்ட செய்தி**

அமெரிக்க வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் மேத்யூ மில்லர் இந்த விமர்சனங்களை நிராகரித்துள்ளார்.

"இந்த அறிக்கை கிட்டத்தட்ட எல்லா வகையிலும் தவறானது. பிணைக் கைதிகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு இது நியாயம் இல்லாதது" என்று அவர் வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் கூறினார். "செய்தி அறிக்கைகள் மூலம் ஹமாஸின் எதிர்வினை பற்றிய தகவல்கள் பகிரங்கமாயின. ஆனால் அவர்களது பதிலின் உண்மையான சாராம்சம் இதுவல்ல. இந்த எதிர்வினை ஐநா பாதுகாப்பு சபையில் வாக்கெடுப்புக்கு முன் தயாரிக்கப்பட்டது, அதற்குப் பிறகு அல்ல என்று என்னால் கூற முடியும்," என்றார் அவர்.

கத்தாரின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மாஜித் அல்-அன்சாரி தோஹாவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், மறைமுகப் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்படவில்லை, அவை தொடர்கின்றன என்றார்.

"பேச்சுவார்த்தைகளுக்கான கால அட்டவணை எதுவும் இல்லை. ஆனால் நாங்கள் எங்கள் கூட்டாளர்களுடன் பேச்சுவார்த்தை முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வருகிறோம்," என்று அவர் கூறினார்.

ஆனால் 10 நாட்கள் பேச்சுவார்த்தைக்குப் பிறகு இஸ்ரேல் தனது பேச்சுவார்த்தைக் குழுவைத் திரும்ப அழைத்ததாக இஸ்ரேலிய அதிகாரிகளை மேற்கோள் காட்டி இஸ்ரேலிய ஊடகங்களும் ராய்ட்டர்ஸ் செய்தி முகமையும் தெரிவித்துள்ளன.

ஈரானுக்கு பயணம் மேற்கொண்ட ஹமாஸ் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியா, இஸ்ரேல் முன்னெப்போதும் இல்லாத வகையில் அரசியல் தனிமையை எதிர்கொள்வதை ஐ.நா.பாதுகாப்பு சபையின் தீர்மானம் காட்டுவதாகத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாத இறுதியில் ஒரு வார கால போர் நிறுத்தத்தின் போது இஸ்ரேலிய சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த சுமார் 240 பாலஸ்தீன கைதிகள் 105 இஸ்ரேலிய பிணைக் கைதிகளுக்கு ஈடாக விடுவிக்கப்பட்டனர்.

ஹமாஸ் நிராகரித்த புதிய ஒப்பந்தம், ஆறு வாரங்களுக்கு போர் நிறுத்தத்தை முன்மொழிந்ததாகக் கூறப்படுகிறது. கூடவே 800 பாலஸ்தீன கைதிகளுக்கு ஈடாக ஹமாஸால் பிடிக்கப்பட்ட 40 இஸ்ரேலிய பிணைக் கைதிகளை விடுவிப்பதும் இதில் அடங்கும்.

ஆனால் காஸாவில் போரில் தோல்வியை ஏற்கும் அறிகுறி இன்னும் தெரியவில்லை. சமீபத்திய இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் பல டஜன் பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

(16ம் பக்கம் பார்க்க)



# கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டதற்காக இந்தியா - அமெரிக்கா இடையே உரசல்!

டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலின் கைது சர்வ தேச கவனத்தை ஈர்த்து வருகிறது.

முதலில் ஜெர்மனி தற்போது அமெரிக்கா என உலக நாடுகள் அவரது கைது குறித்து தங்கள் நிலைப்பாட்டை தெரிவித்து வருகின்றன. இந்தியா, இந்த இரு நாடுகளின் அதிகாரிகளையும் வரவழைத்து, இது உள்நாட்டு விவகாரம் என்று கூறி அவர்கள் கருத்து தெரிவித்ததை கண்டித்துள்ளது.

தங்களது தூதரக அதிகாரியை அழைத்துக் கண்டித்தது குறித்தும் அமெரிக்கா தற்போது கருத்து தெரிவித்துள்ளது.

“நியாயமான, நேர்மையான, வெளிப்படையான நீதி விசாரணையை அமெரிக்கா ஆதரிப்பதாகவும், அதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது” என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர், “டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலின் கைது உட்பட அனைத்து விவகாரங்களையும் உற்று கவனிப்போம்” என்றார்.

டெல்லி மதுபானக் கொள்கை தொடர்பான ஊழல் வழக்கு ஒன்றில் மார்ச் 21ம் தேதி அமலாக்கத்துறை அர்விந்த் கேஜ்ரிவாலை கைது செய்தது.

**அமெரிக்கா என்ன சொன்னது?**

அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர், “தேர்தல் நேரத்தில் பிரச்சார பணிகளை சிரமமாக்கும் வகையில் வங்கி கணக்குகள் வருமான வரித்துறையால் முடக்கம் செய்யப்பட்டது தொடர்பாக காங்கிரஸ் கட்சி எழுப்பிய குற்றச்சாட்டுகள் குறித்து நாங்கள் முழுமையாக அறிவோம்.” என்றார்.

கடந்த வாரம் சோனியா காந்தி உட்பட காங்கிரஸ் மூத்த தலைவர்கள் நடத்திய செய்தியாளர் சந்திப்பில், ரூ.14 லட்சம் வரி பாக்கி தொடர்பான வழக்கில் கட்சியின் ரூ.285 கோடி நிதி முடக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

அமெரிக்க தூதரக அதிகாரியை இந்திய அரசு வரவழைத்தது குறித்து மேத்யூ மில்லரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. “தனிப்பட்ட வகையிலான அதிகாரிகளுக்கு இடையில் நடைபெற்ற சந்திப்பு குறித்து நான் எதுவும் கூற போவதில்லை. நியாயமான நேர்மையான வெளிப்படையான நீதி விசாரணை நடைமுறைகளுக்காக காத்திருப்போம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படி ஒரு நடைமுறையை நாங்கள் ஆதரிக்கிறோம். நியாயமான சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து யாருக்கும் எதிர்ப்பு இருக்க முடியாது என்று கருதுகிறோம். இந்த விஷயத்தை தனிப்பட்ட சந்திப்புகளிலும் கண்டிப்பாக தெளிவுபடுத்துவோம்” என்றார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் அமெரிக்க தூதரக அதிகாரி க்லோரியா பாப்பேனாவை வரவழைத்து, கேஜ்ரிவால் கைது குறித்து அமெரிக்க அதிகாரிகள் கருத்து தெரிவித்ததற்கு கடும் எதிர்ப்பை பதிவு செய்தது. இந்த சந்திப்பு 30 நிமிடங்களுக்கும் மேலாக நடைபெற்றது.

புதன்கிழமை, ஜெர்மனி வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர், மீண்டும் ஒரு முறை அரவிந்த் கேஜ்ரிவால் கைது குறித்து கேட்ட போது, அதற்கு பதிலளிக்க மறுத்துவிட்டார்.

“நாங்கள் இதற்கு ஏற்கெனவே பதிலளித்து விட்டோம்” என்றார். இரு நாட்டுக்கு இடையில் நடைபெற்ற கருத்து பரிமாற்றங்கள் குறித்து பொதுவெளியில் தகவல்கள் தெரிவிக்க முடியாது என்று கூறிய அவர், இந்தியாவுக்கும் ஜெர்மனிக்கு இடையிலான நல்லுறவை பேணுவது தங்கள் விருப்பமாகும் என்றார்.

இந்த ஆண்டு அடுத்த கட்டப் பேச்சு வார்த்தைக்கு இரு நாடுகளும் தயாராகின்றன. “இந்திய அரசமைப்புச் சட்டம், அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை உறுதி செய்கிறது. நட்புறவு கொண்ட நாடு என்ற வகையில், அவற்றை நாங்கள் மதிக்கிறோம்” என்றார்.



**இந்தியா என்ன கூறியது?**

அமெரிக்கா கூறிய கருத்து குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது.



அதில், “இந்தியாவில் உள்ள சில சட்ட நடைமுறைகள் குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்த கருத்தை நாங்கள் கடுமையாக கண்டிக்கிறோம். ஒரு நாடு மற்ற நாடுகளின் இறையாண்மை மற்றும் உள் விவகாரங்களை மதிக்க வேண்டும். ஜனநாயக நாட்டில் இந்த எதிர்பார்ப்பு இன்னும் அதிகம். இந்தியாவின் சட்ட செயல்முறைகள் ஒரு சுயாதீனமான நீதித் துறையை அடிப்படையாகக் கொண்டது. இது எந்த சார்பும் இன்றி சரியான நேரத்தில் முடிவுகளை வழங்க உறுதி பூண்டுள்ளது. அதை கேள்வி கேட்பது நியாயமற்றது” என்றார்.

**கேஜ்ரிவால் கைது குறித்து ஜெர்மனி கூறியது என்ன?**

கேஜ்ரிவாலுக்கு நியாயமான நீதி விசாரணை நடைபெற வேண்டும் என்று ஜெர்மனியும் கேட்டிருந்தது. இதை விரும்பாத இந்தியா, ஜெர்மன் தூதரக அதிகாரி ஜார்ஜ் என்ச்வேலரை வரவழைத்து எதிர்ப்பைப் பதிவு செய்தது.

ஜெர்மன் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளரிடம் தேர்தலுக்கு முன்பாக அரவிந்த் கேஜ்ரிவால் கைது குறித்து தாங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த செய்தித் தொடர்பாளர், “இந்த விஷயத்தை நாங்கள் அறிவோம். இந்தியா ஒரு ஜனநாயக நாடு. நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் அடிப்படை ஜனநாயக கொள்கைகள் இந்த வழக்கிலும் நிலைநிறுத்தப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். ஒரு வழக்கை எதிர்கொள்பவருக்கு கிடைக்க வேண்டிய அனைத்து சட்ட சலுகைகளும் கேஜ்ரிவாலுக்கு கிடைக்க வேண்டும்.” என்றார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் இது குறித்த தனது அறிக்கையில், “இது போன்ற கருத்துகள் எங்கள் நீதித் துறை நடைமுறைகளில் தலையீடாகவும், எங்கள் நீதித்துறையின் சுதந்திரத்தை குறைத்து மதிப்பிடுவதாகவும் உள்ளன” என்று தெரிவித்திருந்தது.

மேலும், “இந்தியா சட்டத்தின் ஆட்சியுடன் கூடிய துடிப்பான மற்றும் வலுவான ஜனநாயகமாகும். பிற ஜனநாயக நாடுகளை போலவே, இந்தியாவிலும் சட்டம் அதன் கடமையை செய்யும். இது குறித்த ஒரு சார்பான அனுமானங்கள் மிகவும் நியாயமற்றவை” என்று கூறியிருந்தது.

இருப்பினும், ஜெர்மனி இப்போது தனது நிலைப்பாட்டை சற்று மென்மையாக்கிக் கொண்டது. புதன்கிழமை, ஜெர்மன் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் இந்தியாவுடனான ஒத்துழைப்பில் ஆழ்ந்த ஆர்வம் கொண்டிருப்பதாக தெரிவித்தார். பரஸ்பர நம்பிக்கை நிறைந்த சூழலில் ஒன்றிணைந்து பணியாற்றவும் தயாராக உள்ளது என்றார்.

**நிபுணர்கள் என்ன கூறுகிறார்கள்?**

இந்தியாவில் உள்ள பலர், அமெரிக்காவின் நிலைப்பாடு தேவையற்றது என்று கூறுகின்றனர். இந்திய முன்னாள் வெளியுறவுச் செயலாளரும் துருக்கி, பிரான்ஸ், ரஷ்யா போன்ற பல்வேறு நாடுகளுக்கான இந்திய தூதர் கன்வல் சிபல், “ஜெர்மனி கூறிய கருத்துக்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்த பிறகும் அமெரிக்கா தனது கருத்தை பதிவு செய்தது. எனவே இந்தியா தனது கருத்தை தெரிவிக்க வேண்டியிருந்தது. இல்லையென்றால், ஜெர்மனியையும் அமெரிக்காவையும் இந்தியா வெவ்வேறு மாதிரி நடத்துவதாக புரிந்து கொள்ளப்படும். வெளியுறவு அமைச்சகத்தின் அறிக்கை மிகவும் பொருத்தமான வார்த்தைகளில் உள்ளது.” என்று பதிவிட்டிருந்தார்.

**கேஜ்ரிவால் ஏன் கைது செய்யப்பட்டார்?**

டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் கடந்த வியாழக்கிழமை புதுடெல்லியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டார். டெல்லி மதுபானக் கொள்கையில் நடந்ததாகக் கூறப்படும் ஊழலில் அவருக்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மதுபான ஊழல் வழக்கில் கேஜ்ரிவால் முக்கிய “சதிகாரர்” என்று அமலாக்கத்துறை வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது.

கலால் கொள்கை தொடர்பான பண மோசடி வழக்கில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்தி நிறுவனமான பி.டி.ஐ தெரிவித்துள்ளது.

அரவிந்த் கேஜ்ரிவாலுக்கு அமலாக்கத்துறை ஏழு முறை சம்மன் அனுப்பியது. இருப்பினும் அவர் விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை.

டெல்லியில் மதுபான ஊழல் வழக்கில் டெல்லி முன்னாள் துணை முதல்வர் மணீஷ் சிசோடியா, ஆம் ஆத்மி எம்பி சஞ்சய் சிங் உட்பட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# காஸா போர்:...

(14ம் பக்கத் தொடர்ச்சி)



ரஃபாவின் புறநகரில் உள்ள குடியிருப்பு கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் ஒன்பது குழந்தைகள் உட்பட குறைந்தது 18 பேர் கொல்லப் பட்டதாக பாலத்தீன ஊடகங்களும் உள்ளூர் சுகாதார ஊழியர்களும் கூறுகின்றனர். முசாபா பகுதியில் உள்ள அபு நக்கீராவின் வீட்டில் டஜன் கணக்கான இடம்பெ யர்ந்த மக்கள் தஞ்சம் அடைந்திருந்தனர் என்றும் கூறப் பட்டது.

காஸா நகரில் அல்-ஷிஃபா மருத்துவமனைக்கு அருகே வான்வழித் தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டதாக வடக்கு காஸாவில் உள்ள அபு ஹசிரா குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ராய்ட்டர்ஸ் செய்தி முகமையிடம் தெரி வித்தனர்.

கடந்த 24 மணிநேரத்தில் 60 இலக்குகளைக் குறிவைத் ததாகவும், “பயங்கரவாத சுரங்கப்பாதைகள், பயங்கர வாத உள்கட்டமைப்புகள் மற்றும் ராணுவ உள்கட்ட மைப்புகள்” இதில் அடங்கும் என்றும் இஸ்ரேலிய ராணு வம் செவ்வாய்கிழமை காலை தெரிவித்தது.

இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் “அல்-ஷிஃபா மருத்துவமனை பகுதியில் துல்லியமான தாக்குதல் நட வடிக்கைகளை மேற்கொண்டனர்” என்று அந்த அறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

**மனிதாபிமான உதவிகளைச் சேகரிக்கும் போது 18 பேர் கொல்லப்பட்டனர்**

கடுமையான சண்டை காரணமாக நோயாளிகள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் ஆபத்தில் இருப்பதாக பாலத்தீனர்கள் மற்றும் உதவிக் குழுக்கள் தெரிவித்துள்ளன. 175 “பயங்கரவாதிகள்” கொல்லப்பட்டுள்ளதாகவும், பொதுமக்கள் யாரும் பாதிக்கப்படவில்லை என்றும் ராணுவம் தெரிவித்துள்ளது.

வடக்கு காஸாவில் விமானத்தில் இருந்து போடப் பட்ட மனிதாபிமான உதவிகளைச் சேகரிக்கும்போது 18 பாலத்தீனர்கள் கொல்லப்பட்டதாக காஸாவில் உள்ள ஹமாஸின் அரசு ஊடக அலுவலகம் செவ்வாயன்று கூறியது.

உணவுப் பொட்டலங்களைச் சேகரிக்கும்போது 12 பேர் கடலில் மூழ்கி இறந்தனர். அதேநேரம் பொருட்களை எடுக்கும்போது ஏற்பட்ட “ கூட்ட நெரிசலில்” சிக்கி ஆறு பேர் இறந்தனர் என்று கூறப்பட்டது.

இந்த அறிக்கையில் மேலதிக தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. திங்களன்று வடக்கு நகரமான பைட் லாஹியாவில் கடற்கரைக்கு அருகே ஏர் டிராப்பின் போது குறைந்தது ஒரு நபராவது நீரில் மூழ்கியதை வீடியோ காட்சிகள் காட்டின.

திங்களன்று அமெரிக்க விமானம் வடக்கு காஸாவில் 18 மனிதாபிமான உதவிப் பொட்டலங்களைப் போட்டதாக பென்டகனை மேற்கோள் காட்டி ராய்ட்டர்ஸ் தெரிவித்தது. ஆனால் பாராசூட்டில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அவை தண்ணீருக்குள் விழுந்தன. ஆனால் யாரும் உயிரிழந்ததை உறுதிப்படுத்த முடியவில்லை.

இஸ்ரேலிய பிணைக் கைதி யூரியல் பரூச் கொல்லப்பட்டதாகவும், அவரது உடல் ஹமாஸிடம் இருப்பதாகவும் இஸ்ரேலிய ராணுவம் அவரது குடும்பத்திடம் கூறியதாக பிணைக்கைதிகள் மற்றும் காணாமல் போன குடும்பங்களின் மன்றம் தெரிவிக்கிறது.

35 வயதான, இரண்டு பிள்ளைகளின் தந்தையான பரூச், அக்டோபர் 7ஆம் தேதி சூப்பர்நோவா இசை விழாவின் போது காயமடைந்தார். பின்னர் அவர் கடத்தப்பட்டார்.

அதே நேரத்தில் காஸாவில் ஒரு காவலர் துப்பாக்கி முனையில் தன்னை பாலியல் வன்புணர்வு செய்ததாக நவம்பரில் விடுவிக்கப்பட்ட ஒரு பெண் பிணைக் கைதி நியூயார்க் டைம்ஸ் செய்தித்தாளிடம் கூறினார்.

நாற்பது வயதான அமித் சுசானா தான் சிறைப்பிடிக்கப்பட்ட போது பாலியல் வன்முறைக்கு ஆளானதாகத் தெரிவித்ததாக செய்தித்தாள் குறிப்பிடுகிறது.

பிணைக் கைதிகள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதற்கான தெளிவான மற்றும் உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும், “அத்தகைய வன்முறை தொடரக்கூடும் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன,” என்றும் இந்த மாதத் தொடக்கத்தில் ஐ.நா குழு கூறியது. ●

